பக்கங்கள் 20
20/=
Registered as a Newspaper in Srilanka


# எதிரொலி
Ethiroli

நீதிக்கொரு பூச்செண்டு

10-16 ஏப்ரல் 2019
வாரஇதழ்




உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்


Northway
Family Mart
Save Money. Live Better.
SAVE MONEY. LIVE BETTER.
.184, Paramesvara Junction,
runelvely, Jaffna.
: 021 222 6002

எதிரொலி
Ethiroli

அம்பலம் பதிப்பகம்,
இல. 241, கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
ethirolimedia@gmail.com, 0212243818

# நீதிக்கொரு பூச்செண்டு

'தர்மத்தின் வாழ்வுதனை சூது கௌவும் மீண்டும் தர்மமே வெல்லும்' என்பது இன்னொருமுறை சுன்னாகம் நிலத்தடி நீர் மாசு படுதல் தொடர்பான உயர்நீதிமன்றத் தீர்ப்பின்படி உறுதிசெய்யப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டுக்கான தரை வழிப்பாதை திறக்கப்பட முன்னர், நொதேன்பவர் என்ற தனியார் நிறுவனமே யாழ்ப்பாணத்துக்கான மின் வழங்கலை ஏகபோகமாக செய்து வந்தது. தரை வழிப்பாதை திறந்த பின்னர் லக்ஸபானவிலிருந்து குடாநாட்டுக்கு மின்சாரம் வழங்கப்பட்ட போதும் அதன் ஒரு பகுதியை நொதேன்பவரே பூர்த்தி செய்து வந்தது.

யாழ்ப்பாணம் படையினரின் கட்டுப்பாட்டில் முற்றுமுழுதாக வந்தபோது, சூழலியல் பற்றியோ மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான நீர் மாசடைதல் பற்றியோ அக்கறைகொள்ள எவரும் இருக்கவில்லை. அல்லது அதற்கான சூழல் அப்போது பொருத்தமானதாக அமையவில்லை. அரசும் இராணுவமும் வைத்ததே சட்டமாக இருந்தது. நொதேன்பவர் தனியார் நிறுவனமும் அரசுக்கு நெருக்கமாக இருந்ததாலேயே யாழ்ப்பாண மின்விநியோகத்தில் தனி இராஜ்ஜியம் செய்ய முடிந்தது.


இந்த நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடங்கிய போது அது குறித்த பூர்வாங்க சுற்றுச்சூழலியல் மதிப்பீடுகள் என்பன ஒப்புக்காகச் செய்யப்பட்டனவே தவிர, இதயசுத்தியோடு மேற்கொள்ளப்படவில்லை. அரசின் அனுசரணை இருக்கும் தைரியத்திலும், யாழ்.மக்களுக்கு சுற்றுச்சூழல் குறித்த அக்கறை இருக்கப்போவதில்லை என்ற கணிப்பிலும் மின் உற்பத்தியில் வருகின்ற ஆயிரக்கணக்கான லீற்றர் கழிவு எண்ணெய், ஒயில் என்பவற்றை அப்படியே நிலத்தடிக்கு அனுப்பிக்கொண்டிருந்தது நொதேன்பவர்.

மக்கள் அக்கறையில்லாமல் இருந்தபோதும், தண்ணீர் சும்மா இருக்கவில்லை. அது நெதேன்பவரின் நாசவேலையை ஒரு கட்டத்தில் எண்ணெய்ப் படலங்களாக கிணறுகளில் மிதக்கச் செய்து காட்டிக்கொடுத்தது. ஓரிரண்டு கிணறுகளில் ஆரம்பத்தில் எட்டிப்பார்த்த எண்ணெய்ப் படலங்கள் கடுகதி வேகத்தில் நூற்றுக் கணக்கான கிணறுகளை ஆக்கிரமித்த போதுதான் நிலைமையின் விபரீதம் மக்களுக்குப் புரிந்தது. சமூகச் செயற்பாட்டாளர்களும் தன்னார்வ அமைப்புகளும் பாதிக்கப்பட்ட மக்களும் தங்கள் நீர், கழிவு ஒயில் கலந்து மாசுபடுத்தப்பட்ட விடயத்தை வெளிப்படுத்தினார்கள். ஆனாலும், அதையெல்லாம் ஆளும் வர்க்கம் கண்டுகொள்ளவில்லை. அப்போது இயங்கு நிலையில் இருந்த வடமாகாண சபை கூட சுன்னாகம் நீர் விவகாரத்தை மூடிமறைக்கவே பிரயத்தனப்பட்டது.

ஆனால் இவை எல்லாவற்றையும் தாண்டி சுன்னாகம் பகுதியில் நிலத்தடி நீர் கழிவு ஒயிலால் மாசுபடுத்தப்பட்டது உண்மைதான் எனவும் இதற்கு முழுப்பொறுப்பையும் நொதேன்பவர் நிறுவனமே ஏற்று பாதிக்கப்பட்டோருக்கு இரண்டு கோடி ரூபா நட்டஈட்டினை வழங்கவேண்டும் எனவும் நீதிமன்றம் தீர்ப்பிட்டுள்ளது. அதன் மூலம் அதிகாரம் மூடிமறைக்க நினைத்த நீதியின் குரல் முழுப்பலத்தோடு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தீர்ப்பு தனியே நொதேன்பவர் என்ற ஒற்றை நிறுவனத்துக்கு மாத்திரம் விடுக்கப்பட்ட எச்சரிக்கை அல்ல. மாறாக தங்களுடைய சுயலாபத்துக்காக உற்பத்தி அல்லது அபிவிருத்தி என்ற பெயரில் இயற்கை வ்ளத்தை வன்புணரும் சகலருக்குமான எச்சரிக்கையாகவும் மாறியுள்ளது.

ஆரம்பத்தில் தமது கிணறுகளில் எண்ணெய்ப் படலம் மிதக்கத்தொடங்கியபோது இதனை வெளிப்படுத்தி/போராடி என்ன வந்துவிடப்போகிறது என்றே மக்கள் எண்ணினார்கள். வெள்ளம் தலைக்கு மேலே போனபின்னர் அவர்கள் அணைகட்டுவது பற்றி நம்பிக்கையீனம் கொண்டிருந்தார்கள். ஆனால், வெள்ளப்பெருக்கு வந்த பின்னரும் அணையைக் கட்டுவதன் மூலம் எதிர்காலத்தில் அப்படியான அசம்பாவிதங்கள் ஏற்படாமல் தடுக்கமுடியும் என்பதை அவர்கள் நம்பவில்லை. ஆனால், இப்போது இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பின் வாயிலாக, இயற்கையை இனி எவர் சுரண்டினாலும் அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனை வாங்கிக் கொடுக்கலாம் என்ற உறுதி மக்களிடத்தே பிறப்பெடுத்துள்ளது. இதன் மூலம் எதிர்கலத்தில் இயற்கையை வஞ்சித்து எவரும் தங்கள் சுயநல பித்தலாட்டங்களை அரகேற்றிக்கொள்ள அச்சங்கொள்வர். அப்படி அச்சப்படுமளவுக்கு தீர்ப்பை வழங்கிய நீதிமன்றுக்கு ஒரு பூச்செண்டு.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"



# அதிகாரத்தின் முன்னால் வளையும் நீதி

■ பேராசிரியர் ஜயதேவ உயன்கொட

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட கைதுசெய்யப்படுவாரா என்ற விவகாரம் கடந்த சில வாரங்களாக மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இந்த விவகாரம் நீதித்துறையின் சுதந்திரம் குறித்து மக்கள் மத்தியில் கரிசனையை ஏற்படுத்தியுள்ளது.

அதிகாரமற்ற, உதவியற்ற மக்களின் உரிமைகள் தொடர்ச்சியாக மீறப்படும்போது அவர்களைப் பாதுகாக்கும் நீதித்துறையின் கடமை மற்றும் அதன் சுயாதீனத் தன்மை குறித்து இந்த விவகாரம் பொதுமக்கள் மத்தியில் கரிசனையைத் தோற்றுவித்துள்ளது. இலங்கைக் கடற்படையினரால் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு பின்னர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பானதே இந்த விவகாரம்.

கப்பம் பெறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த குழுவினரே இந்த இளைஞர்களைக் கடத்தி படுகொலை செய்தனர் என்பது இலங்கை குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரின் விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

இந்த விசாரணைகளின் மூலம் இந்தச் சம்பவங்களில் கடற்படையின் முன்னாள் தளபதி தொடர்புபட்டிருப்பதும் தெரியவந்துள்ளது.

கப்பம் பெறும் நடவடிக்கையில் கடற்படையைச் சேர்ந்த குழுவினர் ஈடுபட்டிருப்பது அவ்வேளை தளபதியாகப் பணியாற்றிய வசந்த கரன்னாகொடவுக்குத் தெரிந்திருந்தது. எனினும், அவர் அதனைத் தடுப்பதற்கு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என சி.ஐ.டியினர் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன. முன்னாள் கடற்படைத் தளபதி தலையிட்டிருந்தால் 11 இளைஞர்களின் உயிர்களையும் காப்பாற்றியிருக்கலாம் என்ற கருத்தும் வெளியாகியுள்ளது.

சட்டமா அதிபர் இந்த வழக்கில் வசந்த கரன்னாகொட சந்தேகநபர் எனத் தெரிவித்து நீதிமன்றத்தில் குற்றசாட்டுகளைத் தாக்கல் செய்யவிருந்தார். கடத்தல், பலவந்தமாக காணாமல்போகச்செய்யப்படுதல் மற்றும் படுகொலை ஆகியன மோசமான குற்றச்செயல்களாகும். இவ்வாறான குற்றங்களில் ஈடுபட்டவர்களைப் பொலிஸார் கைதுசெய்வது வழமையான நடவடிக்கையாகும். சட்டமும் நீதியும் பக்கச்சார்பற்ற முறையில் செயற்படும்போது இதனை விட சிறிய குற்றங்களை செய்தவர்கள் கூட கைதுசெய்யப்படுவது வழமை. மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தி சிலருக்கு காயங்களை ஏற்படுத்தினார் என்பதற்காக வாகனச் சாரதியை கைதுசெய்து தடுத்து வைக்கலாம் என்பதை சில வாரங்களுக்கு முன்னரே லால்காந்த எங்களுக்கு நினைவுபடுத்தினார்.

இதேவேளை, பாரிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட நபருக்கு நீதிமன்றம் பாதுகாப்பளிக்க முடியும் என்பதையும் கடந்த வாரங்களில் இலங்கை மக்கள் அறிந்துகொண்டுள்ளனர். அட்மிரல் கரன்னாகொட தான் கைதுசெய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக நீதிமன்றத்தின் உதவியை நாடினார், நீதிமன்றமும் அதற்கான அனுமதியை வழங்கியது. அரசாங்கத்தின் சார்பிலும் சட்டமா அதிபர் சார்பிலும் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், சட்டமா அதிபர் முன்னாள் கடற்படை தளபதியை கைதுசெய்வது குறித்து ஆர்வம் கொண்டிருக்கவில்லை என தெரிவித்துள்ளார்.

பாரதூரமான குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ள முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் தான் கைதுசெய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றுள்ளார். முன்னாள் கடற்படைத் தளபதி மற்றும் தற்போதைய முப்படைகளின் பிரதானி ஆகியோரும் இந்தச் சலுகைகளை ஓரளவிற்கு அனுபவித்துள்ளனர். முப்படைகளின் பிரதானி கைதுசெய்யப்பட்டு சிறிது நாட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பிணையில் விடுதலையானார்.

கடந்த சில வாரங்களுக்கு சண்டே ஒப்சேவர், வசந்த கரணாகொடவின் சம்பவம் மற்றும் அவரைக் கைது செய்வதில்லை என்ற உயர் நீதிமன்றத்தின் முடிவு மக்களின் மனதில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் குறித்து கட்டுரையொன்றை வெளியிட்டிருந்தது. அதன் பின்னர் இணையத்தளமொன்றும் அதன் தொடர்ச்சியை வெளியிட்டிருந்தது. இந்த இரு ஊடகங்களும் சட்டத்தின் முன்னர் அனைவரும் சமம் என்ற சட்டத்தின் அடிப்படை கொள்கை மீறப்படுவதற்கு ஜனாதிபதியும் சட்டமா அதிபர் திணைக்களமும் நேரடி காரணம் என தெரிவித்திருந்தன.

இந்தத் தகவல் உண்மையானால், இலங்கையில் நீதித்துறை மற்றும் மக்களின் உரிமைகள் குறித்த கலந்துரையாடல்களை மீண்டும் ஆரம்பிக்கவேண்டிய தருணம் வந்துள்ளது. இலங்கையின் ஜனநாயகம் ஆபத்துக்குள்ளாகியுள்ள இந்தத் தருணத்தில் நீதித்துறையின் சுதந்திரமும் (குறிப்பாக உச்சநீதிமன்றம்) சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஸ்தாபன ரீதியிலான சுதந்திரத்தை பாதுகாப்பதும் ஜனநாயகம் மற்றும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பரந்துபட்ட முயற்சிகளுடன் தொடர்புபட்டுள்ள விடயங்களாகும். அதிகாரம் மிக்க மனிதர்களான கோத்தபாய ராஜபக்ஷ, ரவீந்திர விஜயகுணரத்ன, வசந்த கரன்னாகொட ஆகியோர் விடயத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள விட்டுக்கொடுப்புகள் மூன்று விடயங்களை புலப்படுத்தியுள்ளன.

முதலாவது, நீதிமன்றங்கள் அதிகாரம் உள்ளவர்கள் விடயத்தில் சட்டத்தின் அடிப்படை விதிகளை இறுக்கமாக பின்பற்றுவதைத் தவிர்க்கின்றனவா என்ற கரிசனை எழுந்துள்ளது.

இரண்டாவது, பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பது மற்றும் சட்டம் வலுவானவர்கள் முன்னிலையில் மன்றியிடாததை உறுதி செய்வது ஆகிய நீதிமன்றங்களின் ஸ்தாபன ரீதியிலான கடப்பாடுகள் வலுவிழக்கின்றனவா என்ற அச்சம் உருவாகியுள்ளது.

மூன்றாவது, பாதிக்கப்பட்டவர்கள் அதிகாரம் உள்ளவர்களுக்கு எதிராக நீதியைக் கோரும் வேளை நீதிபதிகளினால் மீண்டும் பாதிப்பினை எதிர்கொள்கின்றனரா என்ற அச்சமும் எழுந்துள்ளது.

இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் இலங்கையின் நீதித்துறையின் திறன் மற்றும் முழுமையான அநீதிகளை எதிர்கொள்ளும் எங்கள் சமூகத்துக்கான இறுதி நீதியை உறுதிசெய்வதில் அதன் பங்களிப்பு குறித்து எந்த அவமதிப்பையும் செய்வதற்கு நான் முயலவில்லை.

கடந்த வருடம் நாடு அரசியல் நெருக்கடியை எதிர்கொண்டவேளை நீதிமன்றம் ஒருமித்த குரலில் வழங்கிய தீர்ப்பின் போது அதன் சுயாதீனத் தன்மையையும் நேர்மையையும் நான் வெளிப்படையாக பாராட்டியுள்ளேன்.

நீதியில் பக்கச்சார்பின்மை குறித்த நீதித்துறையின் அர்ப்பணிப்பு என்ற விவகாரம் 2018 டிசம்பரில் நீதிமன்றம் வெளியிட்ட தீர்ப்பின் சட்ட கோட்பாட்டுடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளது என்பதனாலலேயே நான் தற்போது இந்த விவகாரம் குறித்து கருத்து வெளியிடுகின்றேன்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி
Ethiroli

10-16 ஏப்ரல் 2019



ஒற்றன்

## பூதக்கண்ணாடி




FCID probes Global Lifestyle over pyramid-like scheme Featured

146 Shares

**BUSINESS TIMES**

**Injunction against pyramid scheme operator in Jaffna**

By P. Navaratnam (Jaffna Cor.)

View(s):

The Chavakachcheri Magistrate Court in the Jaffna district has issued an interim injunction on Global Lifestyle Lanka Ltd which has been carrying on a pyramid type business in the region.

The order on Tuesday came on a report submitted to court by the Chavakachcheri Police following many complaints made by residents. The company's head office is at Duplication Road, Colombo.

In the ruling, Chavakachcheri District Judge cum Magistrate Ms. Srinithi Nandasegaran ordered the company to stop their activities and the Court Registrar to inform the Central Bank Governor and the FCID about the company and to monitor its activities.

The Police report said that based on complaints this company's activities was like a pyramid scheme in which the company recruits customers like a network and expands the business.

The Magistrate also ordered the Police to inform the DIG and publish a public awareness advertisement in the local newspaper about this scam and instructed Grama Sevakas to conduct awareness meetings on being alerted abo… …nvestment scheme.

**BUSINESS TIMES**

**Three pyramid type businesses under probe**

View(s):

Three pyramid schemes or those that are similar to such networks including Global Lifestyle Lanka Ltd are under investigation by the Central Bank (CB) and the Criminal Investigation Department (CID), CB officials say.

The Chavakachcheri Magistrate Court in the Jaffna district earlier this month issued an interim injunction on Global Lifestyle Lanka Ltd (GLLL) based in Colombo which has been carrying on pyramid type business in the region after a report submitted to court by the Chavakachcheri Police following many complaints made by residents.

In the ruling, Chavakachcheri District Judge cum Magistrate Ms. Srinithi Nandasegaran ordered the company to stop their activities and the Court Registrar to inform the Central Bank

**குளோபல் லைப் ஸ்டைல் நிறுவனம் பொதுமக்களால் சுற்றிவளைப்பு**

Apr 27, 2016 உள்நாட்டு செய்திகள் Comments Off




கொள்ளுபிட்டி டுப்ளிகேசன் வீதியில் அமைந்துள்ள "குளோபல் லைப்ஸ்டைல்" நிறுவனமானது நேற்றைய தினம் பொதுமக்களால் சுற்றிவளைக்கப்பட்டது.

தமக்கு வழங்கப்பட்ட உறுதி மொழிக்கு அமைய வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்ட நன்மைகள் கிடைக்காமையே குறித்த நிறுவனம் சுற்றிவளைக்கப்பட்டதற்கான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், குறித்த நிறுவனத்துடன் கொடுக்கல், வாங்கல்களில் ஈடுபட்ட வாடிக்கையாளர்களே நேற்று(26) இரவு இந்த நிறுவனத்தை முற்றுகையிட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தவர்கள் தம்மை யூதர்களுடன் ஒப்பிட்டு தம்மைத்தாமே மேதாவிகளாகதத் தம்பட்டம் அடித்துக் கொள்வர். ஆனால், யாழ்ப்பாணத்தவர்களைப்போல் முட்டாள்கள் ஒருவருமில்லை. Global Lifestyle Lanka Ltd என்ற நிறுவனம் 2013ஆம் ஆண்டு மத்திய வங்கியால் தடை செய்யப்பட ஒரு பிரமிட் கட்டமைப்பு நிறுவனம். இந்த நிறுவனத்தின் செயற்பாடுகளைச் சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி சிறிநிதி நந்தசேகரனும் கடந்த 2017 டிசம்பரில் தடை செய்திருந்தார். ஆனால் பலாலி வீதி கந்தர் மடத்தில் இரு வாரங்களுக்கு முன்னர் இந்த நிறுவனத்தின் அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் முதல் பொறியியலாளர்கள் வரை இந்த நிறுவனத்தில் முதலீடு செய்துள்ளனர். இந்த நிறுவனத்தைப் பற்றி விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளை கிராமிய மட்டத்தில் மேற்கொள்ளுமாறும் சாவகச்சேரி நீதிவான் சிறிநிதி நந்தசேகரன் கட்டளையிட்டிருந்தார். ஆனால் யாழ்ப்பாண நகரத்தில் இந்த நிறுவனத்தின் வியாபாரம் கொடிகட்டிப்பறக்கிறது.

ஏமாறுபவன் இருக்கும் வரை ஏமாற்றுபவனும் இருப்பான். இந்த நிறுவனம் பற்றிய விபரங்களை விக்கிப்பீடியாவில் பார்வையிடலாம். இந்த நிறுவனம் பற்றி ஊடகங்களில் வெளிவந்த செய்திகள் இங்கு தரப்பட்டுள்ளன.

# அதிகாரத்தின் முன்னால் வளையும் நீதி

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரதம நீதியரசர் நளின் பெரேரா எழுதியதாகப் பலர் கருதும் அந்தத் தீர்ப்பு சட்டத்தின் ஆட்சியே அடிப்படை நெறிமுறை கோட்பாடு என்பதையும் அதன் மீதே எங்களின் அரசமைப்பு கட்டியெழுப்பட்டுள்ளது என்பதையும் தெளிவாகத் தெரிவிக்கின்றது.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதே சட்டத்தின் ஆட்சிக் கோட்பாட்டில் பிரதான கோட்பாடாகும். இது சட்டம் எந்தவித அச்சமோ ஆதரவோ இன்றி - மன்னர் - சாதாரண குடிமக்கள் என்ற வேறுபாடின்றி - இருப்பவர்கள் இல்லாதவர்கள் என்ற பாகுபாடின்றி - அதிகாரம் படைத்தவர்கள் - அதிகாரமற்றவர்கள் என்ற வேறுபாடின்றி - அனைவருக்கும் சமமாகப் பிரயோகிக்கப்படுவதை உறுதி செய்கின்றது.

அரசாங்கத்தின் சக்தி வாய்ந்த ஆணவம் மிக்க கையாட்களின் கண்மூடித்தனமான நடவடிக்கைகளால் தங்கள் உரிமைகளை இழக்கும் அதிகாரமற்ற மக்களுக்கான ஒரே பாதுகாப்பாக மிகக்கடுமையான சுதந்திர நீதித்துறையே காணப்படுகின்றது.

சட்டம் மற்றும் நீதியென்ற பேரில் நீதியைப் பாழடிப்பதற்கான அனைத்து வழிமுறைகளும் அதிகாரம் மிக்கவர்களிடம் உள்ளன என்பதையும் நீதித்துறை அறிந்து வைத்திருக்கவேண்டும்.

கோட்டபாய ராஜபக்ஷவுக்கும் வசந்த கரன்னாகொடவுக்கும் வழங்கப்பட்ட நீதித்துறை சலுகைகள் இலங்கையில் நீதி குறித்த கவலையை உருவாக்கியுள்ளன. அவர்கள் இருவர்களிடம் காணப்பட்ட சட்ட வளங்கள் மற்றும் பொருளாதார வளங்கள் காரணமாக மாத்திரம் தங்களுக்கு சாதகமான தீர்ப்புகளைப் பெறமுடிந்தது என தெரிவிக்க முடியாது. ஊடகங்கள் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வந்துள்ளது போன்று அவர்களுக்கு அரச கட்டமைப்பிற்குள் இயங்கும் வலையமைப்புகளின் ஆதரவும் பாதுகாப்பும் உள்ளது. இந்த வலையமைப்புகள் அரசியல் கட்டமைப்பில் மிகவும் வலுவானவர்களாக காணப்படுபவர்களையும், வர்த்தக சமூகத்தின் மிக முக்கிய நபர்களையும், சட்ட அமுலாக்கல் துறையின் சில அதிகாரிகளையும் இணைக்கின்றன. இந்த வலையமைப்புகள் தங்கள் தனிப்பட்ட அரசியல் நலனுக்காக நீதித்துறையை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தக்கூடிய அதிகாரம் மிக்கவர்களின் புதிய கூட்டணியைக் கொண்டுள்ளன.



வசந்த கரன்னாகொடவின் வழக்கு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட அன்றைய தருணத்தில், சக்திவாய்ந்த வலுவான கூட்டணிக்கு எதிராக நீதி கோரும் அதிகாரமற்றவர்களுக்கு நீதி எவ்வாறு மறுக்கப்படுகின்றது என்பது புலனாகியது. இந்த வழக்கில் ஒருவராக ஆஜரானவர் சரோஜினி நாகநாதன். இவர் கடற்படையினரால் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட இளைஞன் ஒருவரின் தாய். இந்த வழக்கில் ஆஜரான இன்னொருவர் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட. இவருக்கு வர்த்தக சமூகத்தின் செல்வாக்கு மிக்க சிலரும், அரசாங்கத்தின் சிலரும் ஆதரவளித்தனர் போல தோன்றியது.

இருவருக்கும் எவ்வளவு அதிகாரம் உள்ளது என சிந்தித்தால் - அது பாரிய வித்தியாசத்தைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இந்த அதிகார சமநிலையற்றதன்மை நீதிமன்றத்தில் காணப்படும் வேளை இவ்வாறான வழக்குகளில் நீதிபதிகள் வெளிப்படுத்தவேண்டிய உணர்வுபூர்வ தன்மை என்பது நீதிபதிகள் மத்தியில் மனச்சாட்சிக்கும் ஆழ்ந்த சிந்தனைக்குமான கருப்பொருளாக அமையும் என எதிர்பார்ப்போம்.

நீதித்துறையின் கவனத்தை ஈர்க்கவேண்டிய மற்றொரு விடயமும் உள்ளது. கடந்த பல வருடங்களாக மனித உரிமை மீறல்களுக்காக நீதித்துறையிடம் நீதி கோரிய தாய்மார்களும்தந்தைமார்களும்மனைவிமார்களும் பிள்ளைகளும் வறியவர்களாவும் எங்கள் தேசத்தின் குறைந்த சலுகைகளை அனுபவிப்பவர்களாகவும் அரசாங்கத்தினாலேயே நீதி மறுக்கப்பட்டவர்களாக உள்ளதையும் நீதிவான் நீதிமன்றம் முதல் உச்ச நீதிமன்றம் வரை உள்ள நீதிபதிகள் கருத்திலெடுத்திருப்பார்கள் என நான் நிச்சயமாக நம்புகின்றேன்.

பல தசாப்தங்களாக வலுவான ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்திலிருந்து அவர்களுக்கு நீதி கிடைக்காததன் காரணமாகவே அவர்கள் நீதித்துறையிடமிருந்து நீதிக்காகப் பிரார்த்திக்கின்றனர்.

அவர்களுக்கு நீதி கிடைப்பதை எங்கள் அரச ஸ்தாபனங்கள் திட்டமிட்டு தடுத்துள்ளன என்பது வெளிப்படையான விடயம். இதன் காரணமாக தற்போதைய அரசாங்கம் - பாதிக்கப்பட்ட மக்களுக்கு - தனது பதவிக்காலத்தின் முதல் இரண்டு வருடங்களில் - தற்போது அவர்களுக்கு நீதியை மறுக்காத நீதித்துறை உள்ளது எனத் தெரிவித்து வந்தது.

இவ்வாறான வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதிலும் நீதிமன்றத்துக்குச் சென்று நீதி கோருவது என்பது பாதிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் பாதிப்பை எதிர்கொள்ளும் அனுபவமாக மாறியுள்ளது என்பதை நாங்கள் பார்க்கக்கூடியதாக உள்ளது.

அப்படியானால் இதன் உண்மையான அர்த்தம் என்னவென்றால் - நீதிக்காக நீதிமன்றம் வரும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களுக்கு அது இன்னொரு மனவேதனையை ஏற்படுத்தும் விடயமாக அமைந்துள்ளது.

லசந்த விக்கிரமதுங்க படுகொலை, பிரதீப் எக்னலிகொட காணாமலாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டமை, 11 இளைஞர்கள் கடத்தப்பட்டமை (இதில் திருமதி நாகநாதனின் மகனும் ஒருவர்) போன்ற சம்பவங்கள் நீதிபதிகள் மத்தியில் ஆராயப்படும் சிந்திக்கப்படும் விடயங்களாகக் காணப்படக்கூடாதா? நான் நினைக்கின்றேன் நிச்சயமாக அவை அவர்கள் மத்தியில் பேசப்படும் விடயமாக இருக்க வேண்டும். ஏனென்றால், இந்தச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட நீதி என்பது அதிகாரம் மிக்கவர்களினதும் நீதியை மறுக்க முயலும் வலுவானவர்களின் வலுவான கூட்டணியினதும் அரசியல் அபிலாசைகளுடனும், பின்னிப்பிணைந்துள்ளது.

இலங்கையின் நீதி அமைப்பு புதிய அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றது எனத் தெரிவிப்பது மிகையானதில்லை. ஏனென்றால், நீதி என்ற அடிப்படை விடயம் தற்போது அளவுக்கதிகமாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக அதிகாரத்துக்கும் நீதிக்கும் இடையிலான இடைவெளி மங்கலாக்கப்பட்டுள்ளது.

தங்களின் சட்டவாதத்தினால் நாட்டின் முக்கிய பெரும் பிரமுகர்களைக் காப்பாற்றும் ஜனாதிபதி சட்டத்தரணிகளும் இது குறித்து விவாதிக்கவேண்டும். என்றாவது ஒரு நாள் இந்த ஜனாதிபதி சட்டத்தரணிகளில் ஒருவராவது அதிகாரம் மிக்கவர்களின் வலுவான கூட்டணிக்கு எதிராக நீதி கோரும் தனியான - ஆதரவற்ற தாய்மார்களுக்காக ஒரு அரை நாளாவது ஆஜராவார்கள்.

நீதியைப் பின்பற்றி வாழ்பவர்கள் நீதி என்பது மனச்சாட்சியுடன் தொடர்புடையது என்பதை வெளிப்படுத்தும் நாளாக அந்த நாள் அமையும்.

■



கருணாகரன்

# வன்னிக்கு வந்த மகேந்திர நதி

## நீராழிய அனுபவத்தை சொல்கிறார் கருணாகரன்

"அப்பா (இயக்குநர் மகேந்திரன்) உடல் நலக்குறைவினால் அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்" - என்ற தகவலைத் தெரிவித்திருந்தார் மகேந்திரனுடைய மகன் ஜான். இந்தச் செய்தியை முகப்புத்தகத்தில் பார்க்கக் கிடைத்தது.

அப்போது, மகேந்திரன் வன்னிக்கு வந்து விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்ததைப்பற்றி வெளியாகியிருந்த குமுதம் நேர்காணலை யாரோ ஒரு நண்பர் தன்னுடைய முகப்பில் பகிர்ந்திருந்தார். அந்த நேர்காணலைப் பிரதியெடுத்து தெய்வீகனுக்கு அனுப்பினேன். கூடவே மகேந்திரனுடைய வன்னிப் பயணம் பற்றித் தெய்வீகனுடன் பேசினேன். அப்பொழுது தோன்றியது மகேந்திரனைப்பற்றி "எதிரொலி" க்கு எழுதலாம் என்று. அப்படி எழுதிக் கொண்டிருக்கும்போது கட்டுரையை முடிப்பதற்கு முன்பே தெய்வீகனிடமிருந்து அழைப்பு.

"மகேந்திரன் போய் விட்டார்"

இந்த மாதிரி கவலையளிக்கிற சேதி வரும்போது அதிர்ச்சியில், துயரத்தில் ஆடிப்போய் விடுகிறோம். மகேந்திரன் விருப்பத்துக்குரிய சினிமா இயக்குநர் மட்டுமல்ல, நெருக்கத்துக்குரியவரும் கூட.

மகேந்திரனும் ஜானும் 2005 இல் வன்னிக்கு - கிளிநொச்சிக்கு - வந்திருந்தனர். அதற்குச் சில மாதங்களுக்கு முன்புதான் விஜய் நடித்த "சச்சின்" படத்தை ஜான் இயக்கி முடித்திருந்தார். அந்தப் பணிகள் முடிந்த கையோடு வன்னிக்கு இருவரும் வந்தனர். உண்மையில் புலிகள் அழைத்திருந்தது மகேந்திரனையே. இதற்கு வழிகாட்டியது ஓவியர் புகழேந்தியாகும்.

அப்பொழுது ஓவியர் புகழேந்தியின் ஓவியக் காட்சிகள் வன்னி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் நடந்து கொண்டிருந்தன. ஓவியக்காட்சிகளின் முடிவில் புகழேந்தியை அழைத்துச் சந்தித்த பிரபாகரன், "ஓவியத்துறையில் ஆர்வமுள்ள போராளிகள், கலைஞர்கள், மாணவர்களுக்கெல்லாம் ஓவியப் பயிற்சியை வழங்க முடியுமா" - என்று கேட்டார்.

"ஓ.. செய்யலாமே" - என்றார் புகழேந்தி. அப்படியே பேச்சு தமிழீழச் சினிமாவைப் புதிய கட்டத்துக்கு வளர்ப்பதைப்பற்றித் திரும்பியது. "பொருத்தமான சினிமாப் பயிற்றுநர்களை அழைத்தால், அவர்கள் மூலமாக ஏற்கனவே திரைத்துறையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போராளிகளுக்கும் கலைஞர்களுக்கும் விரிவான அறிவையும் நுட்பங்களையும் கற்றுத் தரலாமல்லவா" - என்றார் பிரபாகரன்.

"நிச்சயமாக" - என்றார் புகழேந்தி.

"யாரை அழைக்கலாம்" - என்று கேட்டார் பிரபாகரன்.

அந்த நாட்களில் தமிழ்ச்சினிமாவில் அறியப்பட்டிருந்த பாரதிராஜா, சீமான், தங்கர் பச்சான் போன்றவர்களும் புலிகளுக்கு அறிமுகமாகியிருந்தனர். ஈழப்பிரச்சினையை மையமாக வைத்து "காற்றுக்கென்ன வேலி" படத்தை இயக்கிய புகழேந்தி தங்கராஜ் வன்னிக்கு வந்து பிரபாகரனைச் சந்தித்துச் சென்றிருந்தார். இருந்தாலும் இவர்களுக்கு அப்பால் உள்ள ஒருவரே தேடப்பட்டார்.

"இப்பொழுது (2005 காலகட்டத்தில்) பிஸியாக - முன்னணியிலிருப்பவர்களை அழைத்தால் அதற்கு அதிக செலவாகும். அது மட்டுமல்ல. அவர்களுக்கான நேரமும் பிரச்சினையாக இருக்கும். சிலர் இதை ஓர் அரசியல் விவகாரமாக மாறினால் அல்லது யாராலும் அப்படி மாற்றப்பட்டால் அது தங்களுடைய எதிர்காலத்துக்கு நெருக்கடியாகும் என்று எண்ணுவார்கள். ஆகவே நாங்கள் மகேந்திரனை அழைக்கலாம். அவர் எப்பொழுதும் இயங்கக் கூடியவர். தமிழில் மக்களின் வாழ்க்கையை இயல்போடு பேசும் உதிரிப்பூக்கள், மெட்டி, பூட்டாத பூட்டுகள் போன்ற யதார்த்தச் சினிமாவை வெற்றிகரமாக உருவாக்கியவர். இன்னும் அதே உணர்வோடும் உற்சாகத்தோடும் இருக்கிறார். திரைத்துறையில் பயிற்சியை வழங்கக்கூடிய ஆற்றல் அவருக்கு நிறைய உண்டு" - என்று சொன்னார் புகழேந்தி.

மகேந்திரனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஜானும் தன்னோடு வந்தால் உதவியாக இருக்கும் என்று சொன்னார் மகேந்திரன்.

"ஓ.. தாராளமாக வரலாம். அவரையும் அழைத்து வாருங்கள்" - என்று பச்சைக் கொடியைக் காட்டினர் புலிகள்.

போர் நிறுத்த காலச்சூழலில் நிலவிய நெகிழ்வான நிலைமை இதற்கு வாய்ப்பாக இருந்தது. ஏற்கனவே வீடியோ கமராக்களின் மூலமாகச் சிறிய அளவில் நீளப் படங்களையும் குறும்படங்களையும் தயாரித்திருந்த புலிகளுக்கு போர் நிறுத்தச் சூழல் முழுமையான சினிமாவை நோக்கிச் சிந்திப்பதற்கான வாய்ப்பை அளித்தது. முழுமையான சினிமாவை உருவாக்குவதற்கான சாதனங்கள் வெளியிலிருந்து தருவிக்கப்பட்டன. சாதனங்கள் மட்டுமிருந்தால் போதாது. அனுபவமும் சினிமா அறிவும் உள்ளவர்கள் தேவை என்பதே பிரபாகரனின் எண்ணம். அப்பொழுதுதான் நல்ல படங்களை உருவாக்குவதற்கான சாத்தியங்களை உண்டாக்கலாம்.

இதற்கு ஏற்கனவே குறும் படங்கள், முழுநீளப்படங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு முறைப்படியான திரைத்துறைப்பயிற்சியை வழங்குவது அவசியம் என்று எண்ணினார் பிரபாகரன். இதற்கெனத் திரைப் படப் பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இதனை நிதர்சனத்துக்குப் பொறுப்பாக இருந்த சேரலாதன் ஒருங்கிணைத்தார்.

வன்னி வந்ததும் பயிற்சிகளை ஆரம்பித்தார் மகேந்திரன். முதலில் சினிமா பற்றிய அறிமுகம். இதற்காக, வரும்போது எடுத்து வந்திருந்த உலகின் சிறந்த படங்களை ஒவ்வொரு நாளும் காட்சிப்படுத்தினார். தினமும் ஒரு படமோ இரண்டு படங்களோ காட்சிப் படுத்தப்பட்டன. அந்தப்படங்கள் உருவாக்கப்பட்ட விதம்? அவை பார்வையாளர்களின் மனதில் உண்டாக்கும் அனுபவம்? படங்களைப் பார்க்கும்போது உண்டாகும் சிந்தனை? நடிப்பு, ஒளிப்பதிவு, திரைப்பிரதி, வசனங்கள், இசை, காட்சியமைப்பு, காட்சித்தளங்கள் என ஒவ்வொன்றைப் பற்றியும் உரையாடல்களின் வழியே கவனப்படுத்தினார். குறிப்பாக ஈரானியச் சினிமா, லத்தீன் அமெரிக்கச் சினிமா, ஆப்கானிஸ்தானியச் சினிமா, சிங்களச் சினிமா என்று ஒடுக்குமுறைக்கும் மாற்றுப் பண்பாட்டுக்குமுரிய சினிமாக்களைப் போல ஈழச் சினிமாவும் வர வேண்டும். அப்படி வர முடியும் என்பது மகேந்திரனுடைய நம்பிக்கையும் விருப்பமும்.

இதேவேளை, பயிற்சியில் ஈடுபடுகின்றவர்கள் ஏற்கனவே உருவாக்கியிருந்த அல்லது பங்களித்திருந்த படங்களையெல்லாம் பெற்றுப் பார்த்தார். அப்பொழுதுதான் இவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள், எதையெல்லாம் சிந்திக்கிறார்கள்? எப்படிப் படங்களை உருவாக்குகிறார்கள்? இந்த நிலையில் இவர்களுக்குத் தன்னால் எத்தகைய சினிமாவையும் நுட்பங்களையும் சொல்லித் தர முடியும் என்று தெரியும் என அவர் எண்ணியிருக்கக்கூடும்.

அடுத்த கட்டமாக திரைப்பிரதியை உருவாக்குவது எப்படி என்ற பயிற்சிகள் ஆரம்பமாகின. பயிற்சியாளர்களுடன் கதைகளைப் பற்றிய உரையாடல்கள் நடந்தன. இன்னொரு பக்கத்தில் ஈழப்படைப்பாளிகளின் கதைகளைத் தேடத் தொடங்கினார் மகேந்திரன். இதற்காக ஈழ எழுத்தாளர்களின் புத்தகங்களையெல்லாம் சேகரித்துக் கொடுத்தேன். "இவ்வளவு எழுத்தாளர்களும் கதைகளும் இருக்கும் போது எவ்வளவு மகத்தான சினிமா வரவேண்டும்" - என்று வியந்தார்.



"நாங்கள் படிக்கிற எல்லாக் கதைகளையும் இலகுவில் திரைப்படமாக மாற்றி விடமுடியாது சில கதைகள் சினிமாவில்தான் ஜொலிக்கும்" - என்று தன்னுடைய அவதானங்களையும் அனுபவங்களையும் சொன்னார் மகேந்திரன். அவருடைய உதிரிப்பூக்கள், பூட்டாத பூட்டுகள், முள்ளும் மலரும், மெட்டி போன்ற படங்கள் ஏற்கனவே புதுமைப்பித்தன், பிரபஞ்சன், சிவசங்கரி போன்றவர்களின் கதைகளை வைத்து எடுக்கப்பட்டவையே. ஆகவே அப்படியான ஒரு மரபைத் தன்னிடம் பயில்கின்றவர்களிடத்திலும் பயிற்றுவிப்பதற்கு முயற்சி எடுத்தார். அந்தப் படங்களின் மூலக்கதைகளையும் அவை சினிமாவாக உருவாகியிருப்பதையும் பற்றி விளக்கினார்.

ஒரு கட்டத்தில், மாதிரிக்கு "1996" என்ற படத்தைத் பின்னணியில் இருந்து கொண்டு திரைத்துறைப்பயிற்சிபெற்றுக்கொண்டிருப்போரை இயக்க வைத்தார் மகேந்திரன். இதற்காக எழுத்தாளர் தாமரைச்செல்வியின் "இடைவெளி" என்ற சிறுகதை திரைப்பிரதியாக்கப்பட்டது. இந்தப்படத்தின் மையப்பாத்திரங்களான தாத்தாவாக முல்லை யேசுதாசனும் பேரக்குழந்தையாக எங்கள் மகன் மகிழும் நடித்தனர். எங்களுடைய சுற்றயலிலேயே பெருமளவு காட்சிகள் பிடிக்கப்பட்டன. எடிட்டிங் முடிந்தபோது என்னைக் கூப்பிட்டார். கூட என்னோடிருந்த இரவி அருணாசலத்தையும் அழைத்துப் போனேன்.

"எப்பிடி வந்திருக்குப் படம்ன்னு பாத்துச் சொல்லுங்க" - என்று சொன்னார். ஏற்கனவே அவர் உருவாகிய படங்களையெல்லாம் பார்த்து வியந்தவர்களிடம் இப்படியொரு கேள்வி. இப்பொழுது அவருடன் கூடப் பழகவும் அவர் கூட இந்த மாதிரி இருந்து வேலை செய்யவும் வாய்த்திருக்கிறதே என்ற மகிழ்ச்சி.

படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தோம். இறுதிக்காட்சியில், வீட்டில் இனியும் இருக்க முடியாது என்ற நிலையில் யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பிச் செல்லும் தாத்தாவைத் தேடிக் கொண்டு ஓடும் பேரன்... தாத்தா என்று அழைத்துக் கொண்டு நீண்டதூரம் ஓடிய களைப்பில் தடுமாறி விழப்போகும்போது...

இரவி அழுதே விட்டார். என்னுடைய தொண்டை கட்டி விட்டது. கண்களிலிருந்து நீர் கொட்ட மகேந்திரனின் கைகளை அழுத்திப் பிடித்தேன். மெல்லிய புன்னகையோடு என்னுடைய தோள்களைத் தடவினார் அவர்.


ஏறக்குறைய மூன்று மாதங்களுக்கு மேல் கிளிநொச்சியில் தங்கியிருந்தார் மகேந்திரன். எத்தனை மணிக்குத் தூங்கினாலும் அதிகாலையிலேயே எழுந்து விடுவார். காலையில் எழுந்தவுடன் அவர் மூன்று வேலைகளைச் செய்வார். முதலில் நடை. நடையால் வந்த பிறகு புத்தகம் படிப்பது. மூன்றாவது எழுதுவது. அப்பொழுது அவர் எழுதியவைதான் "நடிப்பு என்பது", "திரைக்கதை என்பது" என்ற இரண்டு புத்தகங்களும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அத்தியாயத்தை எழுதுவார். எழுதிய பிரதியை எடுத்துக் கொண்டு வந்து அன்றன்றே கையில் தந்து "படித்துச் சொல்லுங்க சார்" என்பார். அவருடைய அனுபவங்களின் முன்னே நான் என்னசொல்வது? ஆனாலும் மனதில் பட்டதைச் சொல்வேன். இரண்டு புத்தகங்களையும் நிதர்சனம் வெளியிட்டது. நிதர்சனத்துக்காக அவற்றைப் பதிப்பித்துக் கொடுத்தேன். பிறகு இந்த இரண்டு புத்தகங்களையும் மீள் பதிப்பாக லீனா மணிமேகலையின் "கனவுப்பட்டறை" வெளியிட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் மகேந்திரன் இயக்கி, நிதிப்பிரச்சினைகளால் பாதியில் நின்று போயிருந்த "சாசனம்" படத்தின் வேலைகளை மீளச் செய்வதற்கான கடிதம் வந்திருந்தது. "சாசனம்" இந்திய மத்திய அரசின் நிதியூட்டத்தில் தயாரிக்கப்பட்டிருந்தது. மேலதிக நிதிய்யக் கோரியிருந்த மகேந்திரனுக்குச் சாதகமான பதில் கிடைத்திருந்தது பெரிய உற்சாகத்தைத் தந்தது. தமிழகம் திரும்பியதும் சாசனத்தின் வேலைகளை விரைவாக முடித்து விடவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தார். பிறகு "சாசனம்" வெளியாகியிருந்தது. ஆனாலும் அவர் எதிர்பார்த்தளவுக்கு அது வெகுஜனப்பரப்பில் அறிமுகமாகவில்லை.

தமிழில் மிகச் சிறந்த படங்களை உருவாக்கிப் பெயர் பெற்றிருந்த மகேந்திரனிடம் எந்தப் பெருமிதங்களுமில்லை.

(12ஆம் பக்கம் பார்க்க)






# மரியாதை

அடர்ந்து செழித்திருந்த சமோன் காட்டில் ஒரு சிங்கம் வாழ்ந்துவந்தது. அதற்குத் தன்னைப் பற்றிய பெருமை அதிகம். தான் வலிமையானவன் மட்டுமில்லை, மிகவும் நல்லவன், அதனால்தான் தன்னைக் காட்டு விலங்குகள் மதிக்கின்றன என்ற எண்ணமும் இருந்தது. இப்படித் தன்னை நினைத்து சிங்கராஜா பெருமிதம் அடைந்துகொண்டிருந்தபோது, நரி ஒன்று வந்தது.

"என்ன ராஜா, ஒரே சிந்தனை?" என்று கேட்டது நரி.

"நான் எவ்வளவு நல்லவன் என்று யோசித்துப் பார்த்தேன்." என்று பெருமையாய்ச் சொன்னது சிங்கம்.

"எதை வைத்து அப்படிச் சொல்கின்றீர்கள்?" என்று கேட்டது நரி .

"நான் செல்லும் இடங்களில் எல்லாம் எல்லோரும் எவ்வளவு மரியாதை தருகிறார்கள் என்பது உனக்கே தெரியுமே! இதற்கு மேல் வேறு என்ன வேண்டும்?" என்றது சிங்கம்.

"ராஜா, உங்கள் மேல் உள்ள பயத்தினால்தான் மரியாதையே தவிர, அன்பால் யாரும் மரியாதை கொடுக்கவில்லை," என்றது நரி.

நரி இப்படி சொன்னவுடன் சிங்கராஜாவின் முகமே மாறிவிட்டது. கோபத்தில் கர்ஜித்தது. பயத்தில் தலைதெறிக்க ஓடிவிட்டது நரி.

மகிழ்ச்சியாக இருந்த சிங்கராஜாவின் மனம், கல் எறிந்த குளம்போல் கலங்கிவிட்டது. உண்மையிலேயே இந்தக் காட்டில் வசிக்கும் விலங்குகள் எல்லாம் என் மீது அன்பால் மரியாதை செலுத்தவில்லையா? நரி சொல்வதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டாம். தானே இதை நேரில் தெரிந்துகொள்ள வேண்டும் என்று முடிவெடுத்தது சிங்கராஜா. அடுத்த நாளே, தான் வசித்த குகையை விட்டு வெளியேறி, தலைமறைவாக வாழ ஆரம்பித்தது. ஒரு வாரத்துக்குப் பிறகு, ஒளிந்திருந்து விலங்குகளைக் கண்காணிக்கத் தொடங்கியது.

சிங்கராஜா இல்லை என்ற செய்தி காடு முழுவதும் பரவிவிட்டதால், விலங்குகள் எல்லாம் மகிழ்ச்சியாக இருந்தன. இதைக் கண்டதும் சிங்கத்தின் மனம் வருந்தியது.

"நான் இல்லை என்ற வருத்தம் ஒருவருக்கும் இருப்பதுபோல் தெரியவில்லையே! நான் மீண்டும் வந்துவிடுவேனோ என்ற பயம் மட்டும் சிலரிடம் இருப்பதைப் பார்க்க முடிகிறது" என்று தனக்குள் நினைத்துக்கொண்ட சிங்கராஜா, மேலும் நடந்தது. அப்போது ஆற்றில் தண்ணீர் குடிக்க வந்த இரண்டு மான்கள் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டது.

"ஏன் சோகமா இருக்கிறாய்?" என்றது பெண் மான்.

"நம்முடைய சிங்கராஜா காணாமல் போய் ஒரு வாரத்துக்கு மேல் ஆகிவிட்டது. எங்கே போனார், என்ன ஆனார் என்று தெரியவில்லை" என்றது ஆண் மான்.

"அடடா! நம் மீது அன்பு செலுத்த ஒரு ஜீவன் இருக்கிறதே" என்று மகிழ்ந்தது சிங்கராஜா.

"அட, இதற்கா இவ்வளவு சோகம்? நல்ல விஷயம் தானே?" என்றது பெண் மான்.

"என்ன சொல்கின்றாய்?" என்றது ஆண்மான்.

"சிங்கராஜா எமக்கு ஏதாவது செய்திருக்கிறாரா? எம் இனம் என்றால் அவருக்குக் கொண்டாட்டம். மான்களைத்தான் அதிகமாக வேட்டையாடினார். நீயும் நானும் அவரைப் பார்க்கப் போனால் விருந்தா வைப்பார்? நம்மை விருந்தாக்கிக்கொள்வார். இனியாவது நிம்மதியாக இருப்போம்" என்றது பெண் மான்.

இதற்கு மேல் எதுவும் கேட்கும் மனநிலையில் சிங்கராஜா இல்லை. வருத்தத்துடன் நடக்க ஆரம்பித்தது. திடீரென்று நரியின் அழுகை கேட்டது. சட்டென்று சிங்கம் மரத்துக்குப் பின்னால் ஒளிந்து கவனிக்க ஆரம்பித்தது.

அங்கு வந்த இன்னொரு நரி காரணம் கேட்டது.

"நம் சிங்கராஜா காணாமல் போய்விட்டாரே" என்று தேம்பி அழுதது அந்த நரி.

"ஆஹா! இறுதியில் என் மீது அன்பு வைத்திருக்கும் ஒரு நரியையாவது கண்டுகொண்டேன்" என்று மகிழ்ந்தது சிங்கராஜா.

"அவர் இல்லை என்றால் உனக்கு என்ன நஷ்டம்?" என்றது மற்ற நரி

"என்ன இப்படிச் சொல்லிவிட்டாய்? அவரிடம் எனக்கு நெருக்கம் அதிகம் என்பதுபோல் ஒரு தோற்றத்தை உருவாக்கி வைத்திருந்தேன். அதனால் மற்ற விலங்குகளை மிரட்டி, எனக்கு வேண்டிய காரியங்களை எல்லாம் செய்துகொண்டேன். ஒரு நாளும் உணவு தேடி அலைந்ததில்லை. சிங்கராஜாவுக்கு என்று சொல்லி, உணவை வாங்கிச் சாப்பிட்டேன். நானே ஒரு ராஜா மாதிரி இருந்தேன். இப்போது எல்லாமே என்னை விட்டுப் போய்விட்டதே" என்று அழுதது அந்த நரி.இதைக் கேட்டதும் சிங்கராஜாவின் மனம் இரண்டாவது முறையாக உடைந்தது.

பயத்தால் கிடைக்கும் மரியாதை நீர்க்குமிழி மாதிரி. எப்போது வேண்டுமானாலும் உடைந்துவிடும். அன்பால் கிடைக்கின்ற மரியாதைதான் கல்வெட்டு மாதிரி காலத்துக்கும் அழியாமல் நிற்கும் என்ற உண்மையைப் புரிந்துகொண்ட சிங்கராஜா, அன்று முதல் அன்பாக நடந்துகொள்ள ஆரம்பித்தது.

# துணிவின் மகள்

அக்கினிக் குஞ்சு

வீட்டில்கழிவறைகட்டிக்கொடுக்காத தன் அப்பா மீது காவல்துறையில் முறைப்பாடு கொடுத்ததன் மூலம் எல்லோராலும் அறியப்பட்டவர் ஹனிஃபா ஜாரா. முறைப்பாடு கொடுத்த இரண்டே நாட்களில் அரசாங்கத்தின் மூலம் இவரது வீட்டில் கழிவறை கட்டிக்கொடுக்கப்பட்டது. வேலூர் மாவட்டம் ஆம்பூரில் வசித்து வரும் ஹனிஃபா இது பற்றிக் கூறுகையில், "எங்கள் வீட்டில் கழிவறை கிடையாது. நானும் என் அம்மாவும் அதிகாலை 4 மணிக்கு எழுந்து போய் காலைக்கடன் முடிப்போம். நான் பள்ளிக்கூடம் போக ஆரம்பித்த பிறகுதான் கழிவறையைப் பற்றித் தெரிந்துகொண்டேன். வெளியில் மலம் கழிப்பது சுகாதாரக்கேடு என்று ரீச்சர் பாடம் நடத்தினார். உடனே அம்மா, அப்பாவிடம் கழிவறை கட்டித் தரச் சொன்னேன். எங்கள் வீட்டில் அப்போது பணக்கஷ்டம். அதை என்னிடம்சொல்லாமல் 'நீ முதலாம்பிள்ளையாக வந்தால் கழிவறை கட்டித் தருவேன் ' என்று அப்பா சொன்னரர். ஏற்கெனவே நான் நன்றாகப் படிப்பேன். கழிவறைக்காக இன்னும் நன்றாகப் படிக்க ஆரம்பித்தேன். அப்பா சொன்னதில் இருந்து இப்போது வரை நான்தான் முதலாம் பிள்ளை. அப்படியும் அப்பா கழிவறை கட்டித் தரவில்லை. அப்பா சொன்னதை நான் செய்துவிட்டேன். ஆனால் நான் சொன்னதை அப்பா செய்யவில்லை என்ற வருத்தம் எனக்குள் இருந்தது.

என் அம்மாவும் அப்பாவும் இந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு மனுவும் முறைப்பாடும் எழுதிக் கொடுப்பதைக் கவனித்தேன். நானும் ஒரு முறைப்பாடு எழுதிக் காவல்துறையில் கொடுத்தால் அப்பாவைக் கேள்வி கேட்பார்கள்; கழிவறையைக் கட்டிக் கொடுக்கச் சொல்வார்கள் என்று நினைத்தேன். நானே ஒரு முறைப்பாட்டை எழுதினேன். அம்மாவை மகளிர்காவல்நிலையத்துக்குக் கூப்பிட்டேன். நான் விளையாட்டுக்காகச் சொல்கிறேன் என்று அம்மா நினைத்தார். என்னுடன் கொஞ்சத் தூரம் வந்துவிட்டு, 'வா வீட்டுக்குப் போகலாம்' என்றார். நான் அடம்பிடித்து அம்மாவை அழைத்துப் போனேன் . காவல்நிலையத்தில் என் முறைப்பாட்டைப் பார்த்து ஆச்சரியமடைந்தார்கள். என் தைரியத்தைப் பாராட்டினார்கள். வெளியில் போகும்போதெல்லாம் ரயில் நிலையம், நீதிமன்றம், காவல் நிலையம் என எல்லாவற்றையும் பற்றி எனக்குப் புரிகின்ற மாதிரிச் சொல்லிக் கொடுப்பார் அப்பா. மகளே முறைப்பாடு கொடுத்து விட்டாளே என்று நினைக்காமல், நியாயத்துக்காக அப்பா மேலே முறைப்பாடு கொடுத்து விட்டாயே என்று பாராட்டியவர் தான் என்னுடைய அப்பா" என்கின்றார் ஹனிஃபா ஜாரா.



# சவாலே சமாளி!

கீழே உள்ள குறிப்புகள் ஒரு நாட்டைக் குறிக்கின்றன. அது எந்த நாடு என்பதைக் கண்டுபிடியுங்கள்.

1. தெற்காசியாவிலுள்ள ஒரு நாடு. இந்தியப் பெருங்கடல், அரபிக் கடல், வங்காள விரிகுடா என மூன்று கடல்களால் சூழப்பட்டுள்ளது.
2. மிகப் பழமையான நாகரிகத்தைக்கொண்ட நாடு.
3. பரப்பளவில் உலகின் ஏழாவது பெரிய நாடு. இங்கே சுமார் 120 கோடி மக்கள் வசிக்கின்றனர்.
4. 29 மாநிலங்களும் 6 ஒன்றியங்களும் தலைநகரமும் இருக்கின்றன.
5. 1947 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது. இந்த நாட்டிலிருந்து இரண்டு நாடுகள் பிரிந்து சென்றன.
6. சந்திரயான் விண்கலத்தைச் சந்திரனுக்கும் மங்கல்யான் விண்கலத்தைச் செவ்வாய்க் கோளுக்கும் அனுப்பிய நாடு.
7. தேசிய விளையாட்டு ஹொக்கி. பிரபலமான விளையாட்டு கிரிக்கெட்.
8. இந்த நாட்டின் உயர்ந்த மலைச் சிகரம் கஞ்சன் ஜங்கா.
9. மாமரம் இந்த நாட்டில் தோன்றியது என்பதால் 'மாஞ்சிஃபெரோ இண்டிகா' என்று அறிவியல் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. தேசியப் பழம் மாம்பழம்.
10. இந்த நாட்டின் கொடியில் அசோகச் சக்கரம் இருக்கிறது.



# மூளைக்கு வேலை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | 7 | | 8 | | 4 | | 5 | |
| | | 6 | | | | 7 | | |
| | 8 | | 7 | | 9 | | 2 | |
| | | | | | | | | |
| | 4 | | 1 | | 2 | | 6 | |
| | | 3 | | | | 9 | | |
| | 1 | | 2 | | 8 | | 7 | |
| | | | | | | | | |

# ஒற்றைக்கால் நாரை

அறிவோம்

நம் உடல் செங்குத்தாக இருப்பதால், நம்மால் சில நிமிடங்கள் மட்டுமே ஒற்றைக் காலில் நிற்க முடியும். ஆனால், பூநாரை, நாரை, கொக்கு போன்ற நீர்ப்பறவைகளின் உடல் ஒற்றைக் காலில் நிற்பதற்கு ஏற்றவாறு, அமைந்திருக்கிறது. அதனால் அவற்றால் ஒற்றைக் காலில் நிற்க முடிகிறது என்று சொல்லப்பட்டுவந்தது.

பின்னர் பூநாரையை ஆராய்ச்சி செய்தவர்கள், உடல் வெப்பநிலையைச் சமன் செய்துகொள்வதற்கே ஒற்றைக் காலில் நிற்பதாகச் சொன்னார்கள். சமீபத்திய ஆராய்ச்சியாளர்கள், பூநாரைகளின் மூளை ஓய்வு நேரத்தில் ஒரு பாதி மட்டுமே வேலை செய்கிறது. அதனால் ஒற்றைக் காலைத் தூக்கிக்கொண்டு, தலையை உடல் மீது வைத்து ஓய்வெடுப்பதாகச் சொல்கிறார்கள்.திடீரென்று ஆபத்து வந்தால் சட்டென்று பறந்து செல்வதற்கும் ஒற்றைக் காலில் நிற்பது உதவியாக இருக்கிறது. ஆற்றலைச் சேமிப்பதற்கும் இது உதவுகிறது என்கிறார்கள்

# யார் தர்மகர்த்தா?

■ அவதானி

> “யாரிடமும் சொல்லாதீர்கள். பிறகு என்னைக் கிண்டல் பண்ணுவார்கள். நான் போன பிறவியில் கோயில் தர்மகர்த்தாவாக இருந்தேன். என்னை எவரும் கேள்வி கேட்க முடியாது. கேட்டாலும் நான் உரத்துச் சொல்லும் பாணியில் சொன்னால்,அதுதான் உண்மையாக இருக்கும் என்று நம்பி விடுவார்கள். நான் கோயில் சொத்தை நன்றாக அனுபவித்தேன். பல்வேறு இடங்களில் எனக்காக சொத்து வேண்டிக் குவித்தேன். எனது மரணச்சடங்குக்கு பல்லாயிரம் பேர் கூடினர். எனது அஞ்சலி கூட்டத்தில் பலர் உரையாற்றினர். அந்த உரைகளுக்கு முற்றிலும் எதிர்மாறாக இருந்தது சித்திரபுத்திர நாயனாரின் கணக்கு. அதனால் அவரின் தீர்ப்பின்படி நான் நாயாகப் பிறக்க நேர்ந்தது.”

ஆலயங்களில் பொங்கல் விழா மற்றும் வருடாந்த உற்சவங்கள் ஆரம்பமாகி விட்டன. புளியம்பொக்கணை, பொறிக்கடவை அம்மன் என்பனவற்றைத் தொடர்ந்து உள்ளூர் கோயில் திருவிழாக்கள் நடந்து நல்லூர் கந்தசுவாமி, மாவிட்டபுரம், செல்வச்சந்நிதி என்று அவை தொடரும். எப்போதுமே நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் ஒரே நிர்வாகம்தான். பொதுவாக அவர்கள் யாருக்காகவும் நடைமுறைகளை மாற்றுவதில்லை. பூசை நேரம் அல்லாத நேரத்தில் வந்த போது அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவால் கூட உள்ளே செல்ல முடியவில்லை.

ஆலய நிர்வாகத்தைக் கைப்பற்றுவதில் பொதுவாக ஊர்களில் பெரும்போட்டி நிலவும். சில கோயில் நிர்வாகம் தொடர்பாக நீதிமன்றில் வழக்குகளும் தொடரப்பட்டிருக்கின்றன. கோயில் சம்பந்தப்பட்ட விடயங்களில் வடக்கில் தர்மகர்த்தா அல்லது பரிபாலன சபைத் தலைவர் நிர்வாகத்தை நடத்துவார். கிழக்கில் இவர்களை வண்ணக்கர் என அழைப்பர்.

பழைய கதை ஒன்றுண்டு. முன்னொரு காலத்திலே மனிதர்கள் பேசும் மொழியிலேயே மிருகங்களும் பேசின. இந்நிலைமை பல விதங்களிலும் பயன்பாடாக இருந்தது. ஒரு நாள் வில்லங்கமொன்றும் ஏற்பட்டது. அரசனிடம் விவகாரம் போனது.

ஒரு நாய் தான் தெருவில் அம்மணமாக நிற்கும் போது ஒருவன் வந்து தடியால் அடித்து விட்டான் என்றும் இதற்கு நியாயம் வேண்டும் என்றும் சொன்னது.


“நாயை அடித்ததற்கு தண்டனை வழங்குவதா? அதிலும் நான் முறைப்பாடு செய்த பின்னர் அதைக் கண்டு கொள்ளாமல் இருப்பதா? கண்டுகொள்ளாவிட்டால் நாய்கள் தமக்கிடையே இந்தச் செய்தியைப் பரப்பி விடுமே. அதைவிட மோசம் அண்டை நாட்டு நாய்களுக்கு இந்த விடயம் தெரிந்தால் எமது நாட்டில் நாய்க்கு நீதி கிடைக்கவில்லை என்று அவை செய்திகளைப் பரப்புமே. இன்னொரு விடயம் நாய்கள் ஒத்துழையாமைப் போராட்டத்தை நடத்தினால் கள்வர்களையும் பிடிக்க முடியாமற் போகும்” இவ்வாறு பலவித சிந்தனைகளும் அரசருக்கு உதித்தன. என்ன நடந்தாலும் நாய்க்கு நீதி வழங்குவதென்றே முடிவெடுத்தார்.

நாயை அடித்தவரைத் தேடிப் பிடித்தார்கள். சம்பவத்தைக் கண்ணால் கண்ட சாட்சிகள் வரவழைக்கப்பட்டார்கள். நீதி சொல்வதற்கென்று அறிஞர் குழாமையும் அழைத்தார். அதுதான் அரசன் செய்த மகா தவறாகி விட்டது. “நாய்க்கென்ன வேலை நடுவீதியிலே?” என்று கேட்டார் ஒரு அறிஞர்.

“அடித்தவருக்கு கையை வெட்ட வேணும்” என்றார் ஒருவர்.

“இல்லை முறித்தால் போதும்” என்றார் மற்றொருவர்.

“காலை உடைத்து விட்டால் இழுத்து இழுத்து நடப்பான். இனி இப்படிச் செய்யமாட்டான்” என்றார் இன்னொருவர். “போன வழக்கில் நீர் பிழையான தீர்ப்பொன்று சொன்னீர்” என்று ஒருவர் மீது மற்றொருவர் குற்றஞ்சாட்டினார். “இல்லையில்லை நீர் சொந்த வாழ்க்கையில் இன்ன இன்ன வேலைகளைச் செய்தீர் “என்று குற்றம் சுமத்தியவருக்கு குற்றச்சாட்டை அடுக்கினர். குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒருமித்த கருத்து ஏற்படவேயில்லை. மொத்தத்தில் ஜெனீவாவுக்குப்போன தமிழ்க்குழுக்கள் போல நவக்கிரகங்களாக நின்றனர், நீதி சொல்ல வந்தோர். எல்லாவற்றையும் கேட்ட அரசருக்கு தலை சுற்றியது. இவ்வளவுக்கு ஒரு சிலர் மௌனமாக இருந்தார்கள். அவர்கள் யாராவது புது ஐடியா கொடுத்தால் அவரை மனிதத் துரோகி என்று பட்டம் சூட்டக் காத்திருந்தனர். கடைசியில் அரசர் ஒரு முடிவெடுத்தார். நாயிடமே



கேட்போம் என்ன தண்டனை வழங்குவது என்று. நாய் வழங்கும் தீர்ப்பை அமுல்படுத்துவோம் என்றார். இதற்கு எல்லோரும் சம்மதித்தனர். இல்லாவிட்டால் அரசர் வழங்கும் பிரயாணப்படி, வருகைக்கான கொடுப்பனவு, மதிய உணவு எல்லாம் கிடைக்காமல் போய் விடுமே.

அரசர் சொன்னமுடிவின்படி நாயின் தீர்ப்புக்காக அனைவரும் காத்திருந்தனர். குண்டூசி விழுந்தாலும் சத்தம் கேட்கும் அளவுக்கு அமைதி “இந்த மனிதனை ஒரு கோயில் தர்மகத்தா ஆக்குங்கள்” உரத்துச் சொன்னது நாய். எல்லோருக்கும் இந்தத் தீர்ப்பை கேட்டதும் அதிர்ச்சி. குற்றஞ்சாட்டப்பட்ட மனிதனுக்கோ தன் காதுகளையே நம்பமுடியவில்லை. நீதி சொல்ல வந்தோரில் ஒருவர் அரசருக்கு கேட்காதமாதிரி மற்றவரிடம் முணுமுணுத்தார். “நாய் சேம் சைட் கோல் போடுகிறது” (யாருக்காவது ஏதாவது நாட்டின் பிரதமரோ, ஒரு கட்சியின் உத்தியோகபூர்வ பேச்சாளரோ நினைக்கு வந்தால் அதற்கு நாம் பொறுப்பல்ல’)

பந்திக்கு முந்து என்பார்கள் அப்போதும் ‘செல் சேவீஸ்’ முறை இருந்தது. சாப்பாட்டை நினைத்தவாறு தீர்ப்புச் சொல்ல வந்த நியாயவான்கள் அனைவருமே போய் விட்டார்கள். இதுதான் தருணம் என நினைத்த அரசர் நாயிடம் மெதுவாகக் கேட்டார் “நான் ஒருவருக்கும் சொல்லமாட்டேன். எனக்கு மட்டும் இரகசியமாகச் சொல். உனக்கு மட்டும் மேலதிகமாக சூப் கிடைக்க ஏற்பாடு செய்கிறேன் எதற்காக இப்படித் தீர்ப்பு சொன்னாய். இதெல்லாம் ஒரு தண்டனையா?”

மெதுவான குரலில் நாய் சொன்னது யார்ரிடமும் சொல்லாதீர்கள். பிறகு என்னைக் கிண்டல் பண்ணுவார்கள். நான் போன பிறவியில் கோயில் தர்மகர்த்தாவாக இருந்தேன். என்னை எவரும் கேள்வி கேட்க முடியாது. கேட்டாலும் நான் உரத்துச் சொல்லும் பாணியில் சொன்னால்,அதுதான் உண்மையாக இருக்கும் என்று நம்பி விடுவார்கள். நான் கோயில் சொத்தை நன்றாக அனுபவித்தேன். பல்வேறு இடங்களில் எனக்காக சொத்து வேண்டி குவித்தேன். எனது மரணச்சடங்குக்கு பல்லாயிரம் பேர் கூடினர். எனது அஞ்சலி கூட்டத்தில் பலர் உரையாற்றினர். அந்த உரைகளுக்கு முற்றிலும் எதிர்மாறாக இருந்தது சித்திர புத்திர நாயனாரின் கணக்கு. அதனால் அவரின் தீர்ப்பின்படி நான் நாயாகப் பிறக்க நேர்ந்தது. எனக்கு அடித்தவனுக்கு நீங்கள் கோயில் தர்மகத்தா பதவியை வழங்கினால் அவன் நிச்சயம் கோயில் சொத்தை தின்பான். அவனும் என்னைப்போல நாயாகப் பிறந்து கண்டவனிடமும் அடிவாங்க வேண்டிவரும். இந்த விசயம் எங்கள் இருவரிடமுமே இரகசியமாக இருக்கட்டும். டீல் ஓக்கேயா?” (இந்த இடத்திலும் யாரையும் நினைக்காதீர்கள்).

அரசர் கட்டை விரலை உயர்த்தி “ஓகே” சொன்னார்.நாய் எதிர்பார்த்த தீர்ப்பு கிடைத்தாலும் சூப்பை நக்கித்தானே குடிக்க வேண்டும். அதை நாய் செய்தது.

இப்போது வாசகரிடம் ஒரு விடயத்தை முன் வைக்கிறோம். அரசியல்வாதிகளிலோ அல்லது வேறெந்தப் பதவிகளில் இப்போரிலோ யாரைக் கோயில் தர்மகர்த்தா ஆக்க நினைக்கிறீர்கள் என உங்கள் நண்பர்களிடம் ஒரு வாக்கெடுப்பு நடத்துங்கள். யாருக்கு கூடுதலாக வாக்கு விழுகிறது எனப் பார்ப்போம். ■



# காட்சிகள் மாறிடுமா?

● வேதநாயகம் தபேந்திரன்



“வாஹிட், வந்து நிற்கிறார். கிழமைக் காசு கொடுக்க வேண்டும். இந்தா 10 ரூபா. இதை அவரிட்டக் குடுத்துப் போட்டு காட்டில (Card) பதி” மாமா காசைத் தர கொடுத்துப் பதிந்தேன். மாதத்துக்கு 40 ரூபா கட்டணம் செலுத்தி படம் பார்த்த காலம் ஒன்று இருந்தது. அக்கரைப்பற்று மண்ணிலிருந்து யாழ்ப்பாணம் வந்து மக்கள் மனதை வென்று வாஹிட் எனும் இஸ்லாமிய சகோதரர் தொலைக்காட்சி ஒளிபரப்புச் சேவை ஒன்றை நடத்தினார்.எமது வாழ்வியலில் நீக்கமற நிறைந்த நினைவுகளில் அதுவும் ஒன்று.

1977 இல் ஜே.ஆர் பிரதமராக வந்த போது தாராள பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்தார். அதனால் 1978 இல் தொலைக்காட்சிப் பெட்டி வந்தது. தியேட்டர்களில் மட்டும் பார்த்த சினிமாப் படத்தை வீடுகளிலும் பார்க்க முடிந்தது. ரி.வி.டெக் என்ற முறையினூடாகவும், ஏரியல் அன்ரனா கட்டியும் தொலைக்காட்சி பார்க்கும் வசதி வந்தது. 1980 களின் ஆரம்பத்தில் பணவசதியுள்ள வீடுகளில் தொலைக்காட்சி பரவலாகபுதியதொரு சேவைக் கைத்தொழில் முளைத்தது.

தொலைக்காட்சி அன்ரனா மூலமாக ஒளிபரப்புச் செய்து படங்களைக் காட்டும் தொழிலே அது.ஆரம்பத்தில் இந்த ஒளிபரப்புச் சேவையில் ஈடுபட்ட ஒருவரது வீட்டின் சுற்றுவட்டாரத்தில் தான் ஒளிபரப்புத் தெளிவாக இருந்தது. நாளடைவில் ஓரளவு நவீன உபகரணங்கள் பாவித்து ஒளிபரப்புச் செய்தார்கள். அந்தக் காலத்துப் புதுப்படங்கள் எல்லாம் இந்தத் தொலைக்காட்சி சேவையின் ஊடாக உடனுக்குடன் எமது வீட்டு வாசல்களுக்கு வந்தன. பலரும் விரும்பக் கூடிய புகழ்பெற்ற பழைய படங்களும் ஒளிபரப்பப்பட்டன. சுண்டுக்குளி, பழைய பூங்கா வீதியில் எமது வீடு. எமது வீட்டில் அப்போதுமின்சாரமே இருக்கவில்லை. அப்போதைய வாழ்க்கை வசதி நிறைய இடங்களில் அப்படித் தான். மாமா வீட்டில் இருந்த தொலைக்காட்சியில் வாஹிட் என்ற முஸ்லிம் அன்பரின் தொலைக்காட்சி சேவையைப் பார்க்க முடிந்தது. வாஹிட்டின் ஒளிபரப்புச் சேவை யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரிச் சந்தியிலிருந்து மேற்காகச் சின்னக்கடை நோக்கிச் செல்லும் பாங்சால் வீதியில் ஒரு வீட்டில் இருந்தது. இரட்ணா ஸ்ரோர்ஸ் என்ற ஒரு கடை தற்போதும் இருக்கிறது. அந்தக் கடையுடன் சேர்ந்த மாதிரி ஒரு வீடு. அந்த வீட்டிலிருந்து தான் வாஹிட் ஒளிபரப்புச் செய்வார். அங்கிருந்து ஒரு கிலோ மீற்றர் சுற்றுவட்டாரத்தில் ஒளிபரப்புச் சேவை மிகவும் துல்லியமாகத் தெரியும். ஒளிபரப்புச் சேவைக்கு நேர அட்டவணை வகுத்து வைத்திருப்பார். சனி, ஞாயிறு, மற்றும் விடுமுறை தினங்களில் காலை, மாலை,இரவு ஒளிபரப்பு. மற்றைய நாள்களில் இரவு ஒளிபரப்பு மட்டும் தான் நடக்கும். மாதத்தில் முதல் கிழமை தனது சேவைக்குரிய காசு வாங்க வந்து விடுவார். அவர் வரும் நேரத்துக்கு உடனேயே காசை எடுத்துக்கொடுக்கும் கனவான்களும் சீமாட்டிகளும் (Ladies and Gentlemen ) குறைவு.தவணை போட்டுக் கொடுப்போர் பலர். ஆனால் வாஹிட் சீறாமல் சினக்காமல் காசு வாங்குவார்.” எங்கட வீட்டில ரி.வி இருக்குத் தான். ஆனால் நாங்கள் உங்கட அலைவரிசை பார்ப்பதில்லை.” எனப் பொய் சொல்லிவிட்டு ரகசியமாகப் படம் பார்க்கும் நேர்மையாளர்களும் சிலர் இருந்தனர். வாஹிட் போல ஒளிபரப்புச் சேவை நடத்தும் பலர் யாழ்ப்பாணக் குடாநாடு எங்கும் இருந்தார்கள்.

யாழ்.கச்சேரி நல்லூர் வீதியில் செல்வா வீடியோ என ஒரு சேவை நடந்தது.அவர்களது பழைய கால வீட்டின் படம் தான் இங்கு தரப்பட்டுள்ளது.

செல்வா வீடியோ சேவையும் எனது மாமா வீட்டு ரி.வியிலும் தெரியும். ஆனாலும் நாங்கள் வாஹிட் விசுவாசிகள். அதனால் வாடகைக் காசு வாங்கும் வாஹிட்டின் சேவையுடன் மட்டும் நின்று கொள்வோம்.கோண்டாவிலில் புலவர் வீடியோ சேவை என சேவை இருந்தது. அவர்களும் இதே போன்ற ஒளிபரப்புச் சேவை நடத்தினார்கள். வாஹிட்டின் சேவையில் நாம் நாளுக்கொரு படம் இரவு பார்க்கக் கூடியதாக இருந்தது. இந்தப் படங்களால் பிள்ளைகளின் படிப்புப் பாழாய்ப் போகுது எனக் கல்வியியலாளர்கள் கவலை தெரிவித்தார்கள்.படம் பார்க்கும் ருசியில் பெற்றோரும் பிள்ளைகளும் இணைந்து அடுத்தவீட்டிலோ தமது வீட்டிலோ பார்த்த குடும்பங்களும் இருந்தார்கள். படம் பார்க்கும் போது தெளிவு காணாது என அன்ரனாவைத் திருப்ப அது வீதியில் சென்ற மின்சாரக் கம்பி மீது பட்டு மின்சாரம் தாக்கி இறந்தோரும் இருந்தார்கள். வாஹிட்டின் சனலில் உள்ள படம் சரியில்லையென்றால் அன்ரனாவைத் திருப்போதிருப்பு எனத் திருப்பி வேறு படம் பார்க்கும் விக்கிரமாதித்தன் முயற்சியும் அவ்வப்போது நடந்தது.

**பலாலியில் உள்ள இராணுவம், கடற் படை, விமானப்படை இணைந்த கூட்டுப் படைத் தளத்திலிருந்தும் தமிழ் ஒளிபரப்பு ஒன்று 1987 ஆம் ஆண்டில் நடந்தது. அதில் கமலஹாசன், ரேவதி நடித்த புன்னகை மன்னன் படம் அடிக்கடி ஒளிபரப்பாகும்.கமலஹாசன் ரேவதி சயனைட் விசம் அருந்த முயற்சிக்க அதனைப் பறித்து விட்டு “வாழப் பயந்தவர்களது தற்கொலை முயற்சி தான் சயனைட் அருந்துதல்” என வசனம் பேசுவார்.அதை அடிக்கடி பலாலி சேவையினர் காட்டுவார்கள்.**

கொழும்பு செட்டியார் தெரு லலிதா ஜூவலறி அனுசரணையில் வாராவாரம் புதன்கிழமைகளில் ஒளிபரப்பாகிய படம்1983 ஜூலை தமிழருக்கெதிரான இனவன்முறைத் தாக்குதலுடன் நின்று போனது. இந்த லலிதா யுவலறியின் புதன்கிழமைப் படங்கள் தொடர்பாக மிகவும்சுவாரசியமான தகவல்கள் உள்ளன. அவற்றைத் தனியாக ஒரு நாளில் பார்ப்போம்.

அந்தக் குறையைத் தீர்க்க எம்மவரது உள்ளூர் சேவைகள் பேருதவியாக அமைந்தன.சினிமாப் படம் மட்டுமல்ல. சினிமாப் பாடல்களின் தொகுப்பும் ஒளிபரப்பாகியது. கோயில்கள், தேவாலயங்களின் பெருநாள், திருநாள்களும் இந்த உள்ளூர் சேவையில் ஒளிபரப்பாகியது.சில குடும்பங்களின் மங்கல நிகழ்வுகளும் கூட இந்தச் சேவையில் வந்தது.சிலர் வியாபார சேவைகளுக்கான விளம்பரங்களைக் கூடச் செய்தார்கள். ஒளிபரப்பு இல்லையென்றால் சைக்கிளில் ஓடிச் சென்று சேவை நடைபெறும் வீடுகளுக்கு தெரியப்படுத்துவோம். என்ன ஏது என்று கேட்போம்.அந்தளவுக்கு சினிமா மீது தீராத தாகமும் காதலும். 1983 யூலை இனவன்முறைக் கலவரத்தின் பின்னர் இயக்கங்கள் தோன்றின.ஆயினும் அவர்கள் இந்தச் சேவையின் பக்கம் எட்டியும் பார்க்கவில்லை. 1986 இன் ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள் நிதர்சனம் என்ற பெயரில் ஒருதொலைக்காட்சி சேவையை யாழ்.கொக்குவில் புகையிரத நிலையத்துக்கு முன்பாக இருந்த தொலைத் தொடர்புக் கோபுரத்தில் அமைத்து வழங்கினார்கள்.

இதைவிட பலாலியில் உள்ள இராணுவம், கடற் படை, விமானப்படை இணைந்த கூட்டுப் படைத் தளத்திலிருந்தும் தமிழ் ஒளிபரப்பு ஒன்று 1987 ஆம் ஆண்டில் நடந்தது. அதில் கமலஹாசன், ரேவதி நடித்த புன்னகை மன்னன் படம் அடிக்கடி ஒளிபரப்பாகும்.கமலஹாசன் ரேவதி சயனைட் விசம் அருந்த முயற்சிக்க அதனைப் பறித்து விட்டு “வாழப் பயந்தவர்களது தற்கொலை முயற்சி தான் சயனைட் அருந்துதல்” என வசனம் பேசுவார்.அதை அடிக்கடி பலாலி சேவையினர் காட்டுவார்கள். விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணத்தில் ஏக பெரும் சக்தியாக மாறிய போது இந்தத் தனியார் ஒளிபரப்புச் சேவைகள் தொடர்பாகக் கட்டுப்பாடுகள் நிறைய விதித்தார்கள். அந்தக் கட்டுப்பாடுகளையும் சுமந்தபடி இந்தத் தனியார் சேவைகள் உலா வந்தன. 1987 ஒக்ரோபர் 10 ஆம் நாளன்று இந்திய அமைதி காக்கும் படையினர் மீதுவிடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்தார்கள்.அதன் பின்னரான குழம்பிய காலப்பகுதியில் இந்தத் தனியார் உள்ளூர் தொலைக்காட்சி சேவைகளும் பின்னடைவு நிலைகளைக் கண்டன.

இந்திய தமிழகத்தை எடுத்துப் பார்த்தால் சண் ரி.வி சேவையினர் இப்படியானஒரு வடிவத்தின் ஊடாகத் தான் சென்னையை மையப்படுத்தியதான ஆரம்பக் கட்டவளர்ச்சியைக் கண்டார்கள்.பின்னர் அவர்கள் அதனை மின்சாரக் கம்பங்களில் கேபிள்களைப் பொருத்தி மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் விரிவாக்கிக் கொண்டார்கள்.செய்மதித் தொழிநுட்பம் வந்த காலத்தில் அதனைச் செய்மதி ஊடாக உலகெங்கும்பார்க்கக் கூடியதாகவும் அதற்குப் பணம் செலுத்தி வாங்கும் இணைய அட்டைகளையும் விற்றுக் கொண்டார்கள். இன்று சண் மியூசிக், கே ரி.வி, சண் செய்திகள் ,ஆதித்தியா ரி.வி எனப் பலபெயர்களில் பல அலைவரிசைகளை உடையதாக பெரும் வர்த்தக சாம்ராட்சியத்தையேஉருவாக்கி விட்டார்கள்.

தமிழக அரசியலில் வாக்காளர்களைக் கவர்ந்து ஆட்சியைத் தீர்மானிக்கும் ஒருசக்தியாக சண் தொலைக்காட்சி ஒரு காலம் இருந்தது. அதாவது திராவிடர் முன்னேற்றக் கழகத்தின் கட்சி அலைவரிசையாக உள்ளது.தற்போது அங்கு பலவித அலைவரிசைகள் தோற்றம்பெற்றுள்ளன. கட்சிகள்தமக்கெனத்தனியாக அலைவரிசைகளைக் கொண்டுள்ளன.ஆனால் எமது யாழ்ப்பாணத்தில் துரதிஸ்டவசமாக போர் காரணமாக வாஹிட், செல்வா,புலவர் போன்றவர்களின் தொலைக்காட்சி அலைவரிசைகளைப் போர் தின்றே விட்டது.இல்லாவிட்டால் எம்மவரது மூளைத் திறனுக்கு சர்வதேசமெங்கும் புகழ் மணக்கும் தொலைக்காட்சி அலைவரிசைகள் பிரமாண்டமாக வளர்ந்து இருக்கும்.காலம் செய்த கோலம் ?

# ஈரநிலம்

நிலம் 12

● ஆத்மீ

அம்பகாமத்தில் ஆரம்பித்த போராட்டமும் இவர்களது களமுனைக் காவலும், இப்பொழுது மாத்தளனுக்கு மேற்கே பச்சைப் புல்மோட்டை வெளிவரை நீண்டு விட்டது. அடுத்தடுத்த இழப்புக்கள், கூட இருந்தவர்களின் இழப்புக்கள், யுத்த நெருக்கடி, வளப் பற்றாக்குறை, ஆயுதத் தட்டுப்பாடு என்று நெருக்கடியான தருணத்தைப் போராளிகள் எதிர்கொண்டார்கள். காலம் கடுகதியாய் ஓடிக்கொண்டிருக்க, பச்சைப் புல்மோட்டைப் பகுதியிலிருந்து எதிர்த்து அடித்துக் கொண்டிருந்தார்கள். தாயகனும் இன்னும் சிலரும் ஒரு பகுதியைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

சோறு சாப்பிட்டு எட்டு நாட்கள். இடையில் யாரோ கொடுத்து விட்டிருந்த உலருணவுப்பொதிதான் இன்றுவரைக்கும் ஆகாரம். எதுவும் இனி கிடைக்குமா என்றும் தெரியவில்லை. காயப்பட்டவர்களுக்கு மருந்தில்லை. வழங்கவும் எதுவுமே இருக்கவில்லை. வளங்கள் பகுதியில் எதுவும் இருக்கவில்லை. அந்தளவுக்குத் தட்டுப்பாடு கடும் நெருக்கடியைத் தோற்றுவித்திருந்தது. ஒழுங்காய் குளித்து உடலை ஆசுவாசப்படுத்தி அமைதியாய் படுத்துறங்கி எத்தனை நாட்களென்று அவர்களுக்கு நினைவிருக்கவில்லை. அதை நினைத்துக்கொள்ளும் அளவுக்கு அவகாசமும் இருக்கவில்லை.

* * * *

நிலவு உறங்கி நெடுநேரமாகியிருக்கும் போல. அகன்ற வான வெளியில் ஆங்காங்கே நட்சத்திரங்கள் பூத்துக் கிடந்தன. இரவோடு சில்வண்டுகள் மோதிக் கொண்டிருந்தன. ரீங்காரச் சத்தம் காற்றில் கரைந்து ஒருவித கோரமான ஒலியைக் கொடுத்துக்கொண்டிருந்தது. பொக்கணை கடற்கரையை அண்டிய பகுதிகளில் ஆட்லெறியும் பல்குழலும் வெடித்துக் கொண்டிருந்தன. அவர்களது எறிகணை வீச்சு முதல்நாள் காலையில் தொடங்கி இன்னும் முடிந்தபாடில்லை. எண்ணிப்பார்க்க முடியாதளவுக்கு மக்கள் செத்துக்கொண்டிருப்பதாய் அவ்வப்போது யாராவது தகவல் சொல்லிக்கொண்டிருந்தார்கள். சின்னஞ் சிறுசுகள், கர்ப்பிணிகள், பெண்கள், வயோதிபர்கள் என்று எந்த வித்தியாசமும் இருக்கவில்லை. குண்டுகள் ஆட்களை பார்த்தா வெடிக்கப்போகின்றன? அவை பாட்டில், வன்னியிலிருந்து பாதி மக்களின் இரத்தத்தையும் தசையையும், சேர்த்து உயிரையும் குடித்துக் கொண்டிருந்தன.

சர்வதேசமும், தோள் கொடுக்க வேண்டிய நாடுகளும் புதினம் பார்த்துக்கொண்டிருக்க, குடும்பங் குடும்பமாய் இறப்புக்களின் எண்ணிக்கை அளவு மீறி அதிகரித்துக்கொண்டிருந்தன.

“தாயகன்... எங்கட சைட்டுக்குப் போடப் போறாங்களாம். அலெர்ட் வந்திருக்கு. கவனமடாப்பா.. பொசிசனை பாத்து இரு.. ” என்று ஆளை உலுப்பிய வோக்கிடோக்கி ஓசையில், தன்னைச் சுதாகரித்துக்கொண்டான் தாயகன்.

அந்த ஆற்று வெளியில் பங்கரும் அடிக்க முடியாத நிலைமை. அத்தோடு, நீளமாக போர்முனைகளில் அடித்துப் பயன்படுத்தும் மூவிங் பங்கரும் இங்கே அடிக்க முடியாதளவுக்கு நிலமும், நெருக்கடியுமாய் இருந்தது. அதனால் பனங்குற்றிக் காவலரணும், அதை சப்போர்ட் பண்ணும் மண் மூட்டைகளும் தான் இப்போதைக்கு அவர்களை காவல் காத்துக் கொண்டிருந்த ஆயுதங்கள். அப்பொழுதுதான், புதுக்குடியிருப்பில் பின் பக்கங்களிருந்த அவர்களது நிலைகளிலிருந்து சரமாரியாக கொத்துக்குண்டுகளை அடிக்க ஆரம்பித்து விட்டார்கள். அவை ஊருக்குள்ளும் இவர்கள் நிலைகொண்டிருந்த பக்கங்களிலுமாக வந்து விழுந்து வெடித்துச் சிதறிக்கொண்டிருந்தன.

தாயகன் தன்னைக் கொஞ்சம் பாதுகாப்பாய் நிறுத்திக்கொண்டான். ஆனாலும், அவனுக்கென்று விதித்து விட்டது போல எங்கிருந்தோ பறந்து வந்த கொத்துக் குண்டுகளும் இவர்கள் இருந்த ஏரியாவை அண்டியதாய் விழ ஆரம்பித்தன. சடாரென்று தலையை நிலத்தோடு சாய்த்துப் படுத்தான் தாயகன். பளார் பளாரென இவனுக்குப் பக்கமாய் அடுத்தடுத்து, குண்டுகள் மின்னி வெடித்துச்சிதறின. காதில் விழும் ஒலியைக் கேட்கும் போது, அந்த ஏரியாவே தரைமட்டமாகிவிட்டது போல தோன்றியது. நிலமும் அதிர்ந்து புகை மண்டலமாய், அந்த மூன்று மணிப் பொழுது கோரமாகியது. ஆங்காங்கே அலறல். அதிலும் இவனது சகாக்கள் கூச்சலிடுவது மெலிதாய்க் கேட்டு இவனை விட்டுத் தூரமாவது புரிந்தது. அவ்வளவுதான் தாயகனின் நினைவில் பதிந்திருந்தன. மீதமெதுவும் தெரியவில்லை. தலையின் பின்புறமாய் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அருகிலிருந்த மண்மூட்டையைக்கிண்டிவிட்டிருந்த குண்டின் அதிர்வினால், பனங்குற்றியின் சிதறல்கள் வீசிக் கிடந்தன. கூடவே மணலும், சேற்றுச் சகதியும் வீசியெறியப் பட்டிருக்கத் தன்னிலை மறந்து எங்கோ தொலைந்திருந்தான் தாயகன்.



(நனையும்..)

# உண்மையான ஆளை சனம் பாதுகாக்கும் பொலிஸ் தேவை இல்லை

ஐயோ எனக்கும் பாதுகாப்பு வேணும். என்னையும் ஆரோ சுடப்போறனெண்டு வெருட்டினவங்கள். எனக்கும் கொலைப் பயமுறுத்தல் விடுகிறாங்கள். நானும் கத்திக் கத்திப் பலதடவை கோப்பா ஓ.ஐ.சிக்குச் சொல்லிப் போட்டன். அவரும் இதைக் கவனிக்கிறாரில்லை. வீணா ஒரு சீவனை இழக்கப் போறியள் எண்டும் சொன்னன். ஊ...கும்.. அவர் கேட்டபாடில்லை. வீணா வில்லங்கப் படுவியள் எண்டும் சொல்லி வெருட்டிப் பாத்தன். கடைசியாப் போய் பொலிஸ் ஸ்ரேசனுக்கை உள்ளட்டு இருந்திட்டன்.

ஓ.ஐ.சி என்னைக் கூப்பிட்டு. விசாரிச்சார். சங்கதியைச் சொன்னன். எதிரொலியிலை கண்டதையும் எழுதிறனான். அதாலை வில்லங்கம் ஏதேன் வருமோ எண்டு யோசிச்சுக் கொண்டு படுத்தாப்போலை.... ஆரோ என்னைக் கடத்திக் கொண்டு போய், வாயுக்கை பிஸ்ரலை வைச்சு லிவறை அமத்தேக்கை... முழுச்சிட்டன். பிறகுதான் நான் கண்டது கனவெண்டு யோசிச்சன். எண்டாலும் பயமாக் கிடக்கெண்டு ஓ.ஐ.சீட்டைச் சொன்னன். அவர் ஒரு வெறுந் தேத்தண்ணியும், கடலை வடையும், நூறு ரூபா காசுந் தந்து சொன்னார், போய் வடிவாக் குளிச்சுக் கோயிலுக்குப் போய் கும்பிட்டுப்போட்டுப் படுங்கோ. எல்லாம் சுகம் வரும் எண்டு.

உப்பிடித்தான் சுமந்திரனும் தன்ரை இடக் கையையும் வலக்கையையும் தன்னையும் ஆரோ கொல்லப் பயமுறுத்தல் விட்டவையாம் எண்டு சொல்லி பொலிஸிட்டை முறைப்பாடு செய்து உதவி கேட்டவராம். கட்சித் தலைவரும் மாவையும் ஒண்டும் கேக்கேல்லை. இந்த ஆனான ஆனப்படியான சிவப்பு சால்வைக் கொம்பனியும் எத்தினை கொலையளைச் செய்து போட்டும் ஒண்டும் நடக்கேல்லை எண்ட மாதிரி திரியிதுகள். இது ஒண்டும் செய்யாமல் மென்வலு, கின்வலு எண்டு சனத்துக்குத் தெரியாத பாஷையிலை கதைச்சுப்போட்டு பாதுகாப்பு வேணும் எண்டு கேட்டுப் பகிடி விட்டிருக்கிறார். அது சரி அவருக்கும் பாதுகாப்பு வேணும். ஆனால்ட்டுக்கு ஏன் பாதுகாப்பு? தென்மராட்சியானுக்கும் ஏன் பாது காப்பு? எனக்கு விளங்கேல்லை.

அப்பிடி என்ன சனத்துக்குக் கோவம் வருகிறமாதிரி உவை செய்தவை?

எல்லாம் தங்களைக் ஹீரோ ஆக்கிற விளையாட்டு. சும்மா தங்களுக்குக் கொலைப் பயமுறுத்தல் இருக்குது எண்டு பொய்யளைச் சொல்லிச் சனத்தைப் பேக்காட்டி ஒரு நாள் தாங்கள்தான் பேக்காட்டுப் படுவினம் எண்டு தெரியாதோ? உதுக்குச் சொல்ல உப கதை ஒண்டு இருக்கு. ஒரு ஊரிலை ஒராள் இருந்தவராம். அவர் அப்பப்ப சனத்தைப் பேக்காட்ட வம்பு வேலையள் கனக்கச் செய்வாராம். இருந்திட்டுச் சனம் நித்திரை கொள்ளேக்கை எழும்பி "ஐயோ புலி வந்திட்டுது... எல்லாரும் ஓடி வாங்கோ... ஓடி வாங்கோ" எண்டு கத்துவராம். சனமும் அதை உண்மை எண்டு நினைச்சிட்டு எழும்பிப் பாத்தால் ஒண்டையும் காணக்கிடையாதாம். உப்பிடி இருக்கேக்கை உண்மையா ஒரு நாள் புலி வந்திட்டுதாம். புலி வந்து உவரைப் பிடிச்சாப்போலை உவர் “புலி வந்திட்டுது. புலி வந்திட்டுது” எண்டு கத்தினவராம். சனமும் உவற்றை கீலா விளையாட்டு அது எண்டு நினைச்சிட்டுப் பேசாமல் படுத்திட்டினமாம். காலமை எழும்பிப் பாத்தால்தான் தெரிஞ்சுதாம் ஆள் அவுட்டு எண்டு. உண்மையாப் புலி வந்துபோன கதை அப்பதான் தனக்குத் தெரிஞ்சுதாம். அப்ப பாத்தியளே. ஒரு நாளும் சில விசியங்களிலை பகிடி விடப்பிடாது. விட்டால் அதாலை அபகடந்தானே ஒழிய வேறை ஒண்டும் இல்லை. தெரியுதோ?

அப்ப உவைக்குத் தெரிய வேணும் அரசியல் எண்டாலும் சிலதுகளிலை பொய் சொல்லேக்கை கவனமா இருக்க வேணும் எண்டு. புலம் பெயர்ந்து இருக்கிற ஆக்கள் தன்னைக் கொல்லப் பயமுறுத்தல் விடுகினம்



எண்டு வீணா ஒரு வதந்தியைச் சொல்லி ஊரைக் குளப்பப்பிடாது. விசியத்தை அறிஞ்சால் ஆர் எவர் எண்டதை விளக்கமாச் சொன்னால்தானே சனத்துக்கும் ஊர் உலகத்தின்ரை நடப்பு விளங்கும். உண்மையைச் சொன்னால் சனம் பாதுகாக்கும். அதுக்குப் பொலிஸிட்டைப் போகத் தேவை இல்லை. ஆனால் அதுக்குச் சனத்தோடை விசுவாசமா நடக்க வேணும், என்ன?

– வில்லங்கம் விநாசி

# S.V.MURUGESU (PVT) LTD

இலங்கையின் மிகப் பெரியதும்,
பழையதுமான எரிவாயு விநியோகஸ்தர்
என்ற பெருமை எம்மையே சாரும்




S.V.MURUGESU (PVT) LTD
106, Hospital Road, Jaffna
T.P- 021 222 4341, 021 492 5830

LITRO GAS

தேசத்தின் பசி போக்கிடும்
வடமாகாணத்தின் ஏக விநியோகஸ்தர்



கிருபா லேணர்ஸ்

# கிருபா லேணர்ஸ்
# KIRUBAA LEARNERS

DS.589 அரச அங்கிகாரம் பெற்ற கனரக (A) தர சாரதிப் பயிற்சி பாடசாலை

இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 021 492 3200, 071 4546 960




★★★ கல்விச்சேவையுடன் ஒன்றிய நிறுவனம் ★★★

- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- மும்மொழிகளிலும் வாகனப்பயிற்சி.
- இரவு நேர வாகனப்பயிற்சி.
- தவணை முறைக் கட்டணங்கள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புகள்.

யாழ்ப்பாணம்
- சுன்னாகம். 021 224 2022.
- பருத்தித்துறை. 021 492 3201
- கச்சேரி. 021 222 6699
- ஆவரங்கால். 021 222 6688
- தெல்லிப்பளை. 021 224 3737
- சாவகச்சேரி. 021 227 0700
- நெல்லியடி. 021 300 6550

கிளிநொச்சி
- கிளிநொச்சி. 021 228 5505
- பூநகரி. 021 320 1818
- விசுவமடு. 021 320 1515
- முழங்காவில். 021 300 6544

மன்னார்
- மன்னார். 023 225 1656

வவுனியா
- வவுனியா. 024 222 7777.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி.
வடமாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை


வெளிநாடுகளுக்கான
துரித கடிதங்கள், பொதிகள் சேவை
DHL
அருள்
குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்
021 222 6113
அருள்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்
இல.10, புதிய மாநகர சபை கட்டடத் தொகுதி
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 3536
72 மணி நேரத்தில் உலகின்
எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்.
வட மாகாணத்தின் பொதிகள் சேவைத்துறையில்
முன்னோடிகள்
இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களைக் கொண்டு ஆகாய, கடல்
மார்க்கமாக அதிவிரைவு,பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன் வெளிநாடுகளுக்கான
பொதிகள் சேவையை வழங்கிக்கொண்டு இருக்கும் முன்னணி நிறுவனம் 3 -4
நாட்களில் உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும்.
விசேட சேவைகள்
காய்கறி பழவகைகள், கடலுணவு வகைகள் என அனைத்தும் அனுப்பி
வைக்கப்படும். தங்க, வைர நகைகள், 48 மணி நேரத்தில் உலகின்
எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும்.


உங்கள் கிணற்று நீர் பருகுவதற்கு உகந்ததா?
நீரில் உள்ள பிரச்சினைகளின்
தீர்வாக நாங்கள்....
12 MONTHS WARRANTY
இலவச நீர்ப்பரிசோதனை
இலவச ஆலோசனை
24 Hours விற்பனைக்குப் பிந்திய சேவை
|Life Time Service Warranty
5% OFF
நீங்கள் அருந்தும் நீர்
Yarl Smart Water Filter நீராக
இருந்தால் நீங்களும் SMART
உங்கள் வீடுகளில் / தொழிற்சாலைகளில்
வேறு நிறுவனங்களினால் பொருத்தப்பட்டிருக்கும்
நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களையும் எம்மால் சரிபார்த்து தரப்படும்.
Yarl Smart Water Solution (Pvt) Ltd
Hotline:- 021 430 0044 , 077 057 3684 , 077 473 9802 , 077 112 6410
No.319,K.K.S Road,Jaffna. / Karadippokku Junction,A9 Road,Kilinochchi.


(1505 முதல் 1948 வரையான யாழ்ப் பாணத்தின் வரலாற்றைக் கட்டுரையாளர் இங்கு தொடராகப் பதிவு செய்யவுள் ளார். இங்கு கூறப்பட்டுள்ள தகவல்கள் பெரும்பாலும் ஆங்கில மூலங்களில் இருந்து பெறப்பட்டவை. தகவல்களில் வேறுபாடு காணப்படும் சந்தர்ப்பங்களில் இரண்டு தகவல்களையும் இங்கு தரவுள்ளதாகவும், அவை தொடர்பில் தான் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை எனவும் கட்டுரையாளர் தெரிவித்துள்ளார்.)



ந.பரமேஸ்வரன்
parames35@gmail.com

# யாழ்ப்பாணம்

1505–1948 வரையான வரலாற்றுத் தடங்கள் 34



# ஒல்லாந்தர் ஆட்சி

**1658 செப்ரெம்பர் சதிமுயற்சி**
**பூதத்தம்பி கதை**

ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய சிறிது காலத்தினுள் ஒல்லாந்தருக்கு எதிரான சதிமுயற்சி ஒன்று யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது.ஒல்லாந்த அரசிற்கு விசுவாசமாக நடப்போம் என சத்திய பிரமானம் செய்து போர்த்துக்கல்லுக்கு திரும்பி செல்லாமல் யாழ்ப் பாணத்தில் தங்கியிருந்த பறங்கியர் ஐந்துபேர் கல்தேறா (Caldero) என்ற கத்தோலிக்க பாதிரியார் யாழ்ப்பாணமுதலியாரான பூதத்தம்பி உட்பட மொத் தம் 14பேர்,ந்த சதியில் சம்பந்தப்பட்டிருந்தனர்.

அந்திராசி (Andare) முதலியார் இந்தச் சதிமுயற் சியை கண்டுபிடித்தார். சதிமுயற்சியில் உட்பட்ட வர்களுக்கு மிகவும்கொடூரமான தண்டணை வழங்கப் பட்டது. சதிகாரார்களில் மூவர்சிலுவையில் அறையப் பட்டு கோடரியால் அவர்களின் நெஞ்சுபிளக்கப்பட்டு ருடவ்ரல் பிடுங்கி வாய்க்குள் தணிக்கப்பட்டபின் தலைகள்வெட்டிகடை வீதியில் வைக்கப்பட்டன. கல்தேறா பாதிரியார் சிரச்சேதம் செய்யப்பட்டார். ஏனையோர் தூக்கிலிடப்பட்ட பின் அவர்களது உடல்கள் பறவைகளுக்கு உணவாக மரங்களில் கட்டி தொங்கவிடப்பட்டன. இத் தண்டனை 15.9.1658 அன்று நிறைவேற்றப்பட்டது.தனிப்பட்ட பகை காரண மாகவே சிங்கள முதலியாரான அந்திராசி பூதத் தம்பியைக் காட்டி கொடுத்ததாக பூதத்தம்பி நாடகம் கூறுகிறது. அந்திராசி பூதத்தம்பியின் மனைவியின் அழகில் மயங்கிதவறான எண்ணத்துடன் அவளை நெருங்கிய போது அவள்விளக்குமாற்றை காட்டி எச் சரித்ததாகவும் அவளை பழிவாங்கும்நோக்கத்துட னேயே அந்திராசி பூதத்தம்பியை காட்டிக் கொடுத்த தாககூறப்படுகிறது.ஒல்லாந்தருக்கு எதிரான சதித்திட் டத்தை தீட்டியபறங்கி முதலியார்கள் பூதத்தம்பியின் வீட்டிலிருந்தேஒல்லாந்தருக்கு எதிரான சதித்திட் டத்தை தீட்டினார்கள் ஆனால் இந்தவிடயம் பூதத் தம்பிக்கு தெரிந்திருக்கவில்லை. பூதத்தம்பி அன்றைய தினம் இராப்போசன விருந்துக்கு ஏனைய முதலி யார்களை அழைத்து விட்டு வெளியே சென்றிருந்தார். இராப்போசனவிருந்துக்காக பூதத்தம்பியின் வீட்டிற்கு வந்த அந்திராசிமுதலியார் பறங்கியரின் சதிதிட்டத்தை கேட்டு பூதத்தம்பிக்கும் இந்த சதிபற்றிய விடயம் தெரியும் என ஒல்லாந்தரிடம் பூதத்தம்பியையும் சேர்த்து காட்டி கொடுத்தாக கூறப்படுகிறது.

பூதத்தம்பி தப்பிச் சென்றுவிடக்கூடாது என்பதற் காக ஊர்காவற்றுறை கடல் கோட்டையில் சிறைவைக் கப்பட்டிருந்தார். இதன்காரணமாக ஊர்காவற்றுறை கடல் கோட்டை பூதத்தம்பி கோட்டை எனவும் அழைக்கப்படுகிறது.

---

# வன்னிக்கு வந்த மகேந்திர நதி

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவருடைய படங்கள் நாற்பது ஆண்டு களாக மிகச் சிறந்த படங்களின் வரிசையில் குறிப்பிடப்படுகின்றன. மிகச் சிறந்த இயக் குநராகவே எல்லோராலும் மதிக்கப்படுகி றார். தமிழில் முன்னணி நட்சத்திரங்களாக இருந்த எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசன், ஜெய் சங்கர், கமல்ஹாசன், ரஜினிகாந்த் எனப் பலருடன் இணைந்து வேலை செய்திருக் கிறார். ரஜினிக்கு நடிப்பில் நல்லதொரு அடையாளத்தை முள்ளும் மலரும், ஜானி ஆகிய படங்களில் வழியாகக் கொடுத்தவர். ஆனால் இன்னும் தன்னால் ஒரு சிறந்த சினி மாவை உருவாக்க முடியவில்லை. அதற்காக முயற்சித்துக் கொண்டிருக்கிறேன் என்றே சொல்வார். உண்மையும் அதுதான். அவர் தன்னுடைய விருப்பத்துக்கேற்ற படங்களை உருவாக்குவதற்கு முயற்சித்துக் கொண்டே யிருந்தார். அதற்கென ஏராளம் கதைகளைக் கையில் வைத்திருந்தார். எண்ணற்ற குறிப்பு களை மனதில் வரைந்து கொண்டிருந்தார். ஆனால் காலமும் தமிழ்க்கலாசாரக் கள மும் அதற்கான இடத்தைச் சரியாக வழங்க வில்லை.

வன்னிக்கு வந்து சென்ற பிறகு வழங்கிய நேர்காணல் ஒன்றில் "யோசித்தபோது சந்தித்த மூன்றரை மணி நேரமும் ஒரு வார்த்தைகூட பிரபாகரன் அரசியல் பேசவில்லை என்பது ஞாபகத்துக்கு வந்தது. "அவருக்கு எரிக் சோல் ஹம்மிடம் என்ன பேசவேண்டும். இந்த மகேந்திரனிடம் என்ன பேச வேண்டும் என்று தெரிந்திருக்கிறது" என்று குறிப்பிட் டிருந்தார்.

மகேந்திரனுடைய தடங்களையும் கனவு களையும் ஈழச் சினிமா தொடருவதே அவ ருக்கான மதிப்பளித்தலாகும். தமிழ்ச்சினிமா மகேந்திரனைப் புகழ்ந்துரைப்பதை விட வும் அவர் விரும்பிய சினிமாவை தமிழ்ப் பண்பாட்டுச் சூழலில் உருவாக்குவதே சிறப்பு. அதுவே மகேந்திரன் என்ற கலை ஆளுமைக் குச் செலுத்தும் மெய்யான அஞ்சலி.





# தலைவருக்கு தெரியும்

## இயக்குநர் மகேந்திரனின் மனப்பகிர்வு

தமிழர்களின் இதயங்களில் என்றைக்குமே வாழ்ந்து கொண்டிருக்கும் தேசியத் தலைவர் பிரபாகரனை வைத்து உலகமெல்லாம் அரசியல் செய்வது சர்வசாதாரணமாகிவிட்டது. அதிலும் குறிப்பாக தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் இடையில் அரசியல் முடிச்சுப்போட்டு சுய அரசியல் இலாபங்களுக்காக அரங்கேற்றப்பட்டுக்கொண்டிருக்கும் நாடகங்களுக்கு மத்தியில் அதே தமிழகத்தில் வாழ்ந்த இயக்குநர் மகேந்திரன், தலைவர் பிரபாகரனைச் சந்தித்த பின்னரும் கூட அரசியல் தேவைக்காக எப்போதுமே ஈழத்தையோ தலைவர் பிரபாகரனின் பெயரையோ உச்சரித்தறியாதவர்.

“துப்பாக்கிகளுக்கும், கண்ணிவெடிகளுக்கும் இடையே தலைவர் பிரபாகரனுடன் நிகழ்ந்த அந்த அதிரடிச் சந்திப்பு பற்றிய கடந்த வாரம் காலமாகிய இயக்குநர் மகேந்திரனின் மனப் பகிர்வு இது-

“திடீரென்றுதான் அழைப்பு. ரொம்ப நாளாக நின்றுபோயிருந்த சாசனத்தின் இறுதிக்கட்ட வேலைகளில் இருந்தேன். தமிழீழத்தில் சினிமா பற்றி ஆர்வமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு சினிமா பற்றிச் சொல்லி, ஒரு படமும் தயாரித்துத் தரவேண்டும். வரமுடியுமா? என்று கேட்டார்கள். மறுவார்த்தையாக மறுப்புச்சொல்லாமல் சம்மதித்தேன். அருமையான மூன்று மாதங்கள். அங்கேயிருந்து 1996 என்ற அவர்களின் வாழ்க்கை சார்ந்த சினிமாவை எடுத்துக் கொடுத்தேன். யாருமே முறைப்படி அனுபவம் பெற்ற நடிகர்கள் கிடையாது. 1996 இன் இறுதிக்கட்ட வேலைகளில் இருந்தபோதுதான், திடீரென்று எடிட்டிங் அறையின் வெளியே கார் வந்து நின்றது.

சினிமா, கலைப் பிரிவுக்குத் தலைமை வகிக்கும் சேரா என்னை அணுகினார். “நீங்கள் அவசியம் அவரைச் சந்திக்க வேண்டும். அவரும் உங்களோடு கதைக்க விரும்புகிறார். இப்போதே நீங்கள் புறப்பட வேண்டும்” என்றார்கள். அதற்கான ஏற்பாடுகள், விவரணைகள், பாதுகாப்பு, சிறிய பதற்றம், பரபரப்பு, ஆர்வம். நாம் சந்திக்கப்போகிறவர் யார் என்று புரிந்துவிட்டது. வேகம் பற்றிக் கொண்டது. சூழ்நிலை கெடுபிடி ஆகிவிட்டது. வழியெங்கும் தம்பியின் படை. பிரமாதமான கட்டுக்கோப்பு. உங்களில் யாராலும் யூகிக்க முடியாத இடத்தை நோக்கிய பயணம். சேரா என்னிடம் மெல்லிய சிரிப்போடு, பேசிக் கொண்டே வந்தார். “தலைவர் உங்களின் உழைப்பைப் பற்றி விசாரித்தார். சந்தோஷப் பட்டார். பார்க்க வேண்டும் என்று விரும்பினார். இந்த விருப்பம் சாதாரணமானதல்ல” என்று பேசிக்கொண்டே வந்தார். எனக்கு ஒன்றுமே நிலை கொள்ளாமல் தவித்தேன். உலகத்தையே தன் பக்கம் பார்க்க வைக்கிற மாபெரும் தலைவன். அவரையே சந்தித்துப் பேசப் போகிற பேரனுபவம். அதை எப்படி நாம் உள்வாங்கப்போகிறோம் என்றெல்லாம் சிந்தனைகள்.

திடீரென்று அடுக்கடுக்கான விசாரணைகள். பாதுகாப்புக் குளறுபடி இல்லாத கம்பீரமான விசாரணை. இருப்பிடம் நெருங்கப்போகிறோம் என்று தெரிந்துவிட்டது. சேராவிடம், “நான் அவரை எப்படிக் கூப்பிடுவது. சார் என்றா, அல்லது வேறு முறையிலா?” என்று, போட்டோக்களில் பார்த்திருந்த அவரின் கம்பீரத்தை நினைவுபடுத்திக் கேட்டேன். “நீங்கள் அவரைத் தம்பி என்று அழைத்தால் பிரியப்படுவார். நாங்கள் எல்லோருமே அவரை எங்களுக்குள் அழைக்கும் விதம் அதுதான். ஒன்றும் பயப்பட வேண்டாம்” என்றார். நான் பயப்படவில்லை. பெருமிதப்பட்டேன்.

அந்த இடமும் வந்தது. அரசியல் பிரிவுத்தலைவர் தமிழ்ச்செல்வன் வெள்ளைச் சிரிப்போடு எங்கிருந்தோ பிரசன்னமானார். என்னை வரவேற்று, அவர் இருக்கிற அறைக்கு அழைத்துப்போனார். நான் எப்படி அந்தக் கதவைத் திறப்பது என்று கணநேரம் திகைத்தபோது, மெல்லத் திறந்தது கதவு. வர்ணிக்க முடியாத கம்பீரத்தில் என்னை வணங்கினார் பிரபாகரன். என்னால் அவரை ஐயா என்றுதான் அழைக்க முடிந்தது.

என்னை இருக்கையில் அமர்த்திய பிறகே உட்கார்ந்தார். என் மனக்கதவுகளையெல்லாம் திறந்து உள்ளே போய்க் கொண்டேயிருந்தார் தலைவர். உருகிக் கரைந்து உள்ளே போய்க்கொண்டேயிருந்தேன். அன்போடு பேசத்தொடங்கினார் தம்பி. “நாங்கள் உறக்கம் இல்லாமல், சதா விழித்துக்கொண்டேயிருக்கிறோம் என்றால், நீங்களும் ஏன் அப்படி இருக்கவேண்டும்?. உழைக்கிற நேரத்துக்குத் தகுதியாக நீங்கள் ஓய்வெடுக்கலாம்.” என்ற கரிசனத்தோடு ஆரம்பமானது பேச்சு. இரண்டு பேருமே ஐயா என்று விளித்துக் கொண்டோம். “இராணுவம் எங்கள் நாட்டில் இளம் பெண்களைக் கற்பழித்தது. அப்படிக் கேவலப்படுத்தியதைவிட, தமிழ் சினிமா பெண்களை இழிவுபடுத்துகிறது என்று வருத்தத்தோடு பேசினார். கன்னத்தில் முத்தமிட்டால் எங்களைச் சரியாக முன்னெடுத்து வைக்கவில்லை என்று சுட்டிக்காட்டினார். பாரதிராஜா ஆய்த எழுத்து படத்தில் நடித்திருக்க வேண்டியது அவசியம்தானா?” என்று கேள்வி எழுப்பினார்.

தமிழ் சினிமாவின் மீது அக்கறைப் பட்ட பேச்சை அப்படியே ஹொலிவுட் பக்கம் திருப்பினார் தம்பி. எனக்கு ஆச்சரியம்... யார் இவர்! இவரின் பார்வைகள் என்ன? இப்படி ஒரு சின்ன தேசத்திலிருந்து உலகமே திரும்பிப் பார்க்க புறப்பட்டு வந்தது எப்படி? என்றெல்லாம் மனம் அலை பாய்ந்தது. ஹொலிவுட் படங்களும் திசை திரும்பியதைக் குறிப்பிட்டார். உங்களுக்கு ஹாரிசன் போர்டை பிடிக்குமா? என்று எனக்குப் பிடித்த அவரையே குறிப்பிட்டார். படக்காட்சிகளைத் தனித்தனியாகப் பிரித்துப்பேசினார். எனக்கு 200 ஹாலிவுட் சி.டிகளைப் பரிசாகத் தந்தார். அரைமணி நேரத்துக்கு இருக்கும் என்று நினைத்திருந்த பேச்சு மூன்றரை மணி நேரத்துக்கு விரிந்தது. என்னோடு உணவருந்தினார். என்னை முழுமையாக விசாரித்தார் முள்ளும் மலரும் க்ளைமேக்ஸ் தன்னைப் பாதித்ததைக் குறிப்பிட்டார். உதிரிப்பூக்கள் அனுபவத்தைப் பகிர்ந்தார்.

நாங்கள் விடைபெறுகிற அந்தத் தருணம் வந்தேவிட்டது. வாசல் வரைக்கும் வந்து வழியனுப்பினார். கடைசியாகப் பேசிக்கொள்கிற நிமிடங்கள் உன்னதமாக அமைய, கூடியிருந்த பாதுகாப்புகளை விலகியிருக்கச் சொன்னார். “நீங்கள் அடுத்த முறையும் வருவீர்கள். ஆனாலும் யுத்தம் அப்போதும் நடக்கும். இருந்தாலும் உங்களைச் சந்திப்பேன்.” என்றார். அவரது பேரன்பின் அடையாளமாகச் சிறிய தங்கப்பதக்கத்தைக் கொடுத்தார். அவரோடு புகைப்படம் எடுத்துக்கொள்கிற விருப்பம் உடனே நிறைவேற்றப்பட்டது. திரும்பி வண்டியில் உட்கார்ந்தபோது சீருடை, துப்பாக்கிகளோடு தலைவரின் அனுபவச் சாந்தமும் மனசுக்குள் வந்தது.

கொழும்பு விமான நிலையத்தை வந்தடைந்தேன். என்னுடைய கைப்பையை வாங்கி, ஒரு சிங்கள அதிகாரி சோதனையிட்டார். அந்தப் பதக்கத்தைப் பார்த்த மறு விநாடி என்னை நிமிர்ந்து பார்த்து, புன்னகைத்து, உடனே கைப்பையை மூடி என்னை விமானத்தின் வாசல் வரைக்கும் வழி நடத்தினார். விமானத்தில் வந்து உட்கார்ந்து யோசித்தபோது, சந்தித்த மூன்றரை மணி நேரமும் ஒரு வார்த்தை கூட பிரபாகரன் அரசியல் பேசவில்லை என்பது ஞாபகத்துக்கு வந்தது.

“அவருக்கு எரிக் சோல்ஹம்மிடம் என்ன பேசவேண்டுமென்று தெரிந்திருக்கிறது. தமிழ்ச்செல்வனிடம் என்ன பேசவேண்டுமென்று தெரிந்திருக்கிறது. இந்த மகேந்திரனிடமும் என்ன பேசவேண்டுமென்று தெரிந்திருக்கிறது.”

-இயக்குநர் மகேந்திரன்.

# சிறப்பு முகாம் சித்திரவதை

43



தோழர் பாலன்

கழிவறைக்குச் செல்வதாயிருந்தால் பூட்டை அவிழ்த்து என்னோடு கூட வருவான். கழிவறையோ முடை நாற்றம் அடித்தது. குடிப்பதற்கு நீரில்லை. உணவில்லை. எனது இரு மருங்கிலும் நோயாளிகள் செத்துக் கொண்டிருந்தார்கள். அந்த சாக்காட்டில் வீசிய பல்வேறு மணங்களுடன் பிண நாற்றமும் சேர்ந்து கொண்டது. என் வாழ்வில் முதல் முறையாக நரகத்தை எட்டிப் பார்த்தேன்.

சென்னை மருத்துவமனை ஒரு விசித்திர உலகம். மிகச் சிறந்த வைத்தியர்களும், அறுவை சிகிச்சைக்காரர்களும், மருத்துவ இயந்திர சாதனங்களும், மருந்து வகைகளும் நிறைந்திருந்ததால் பல நோயாளிகளை மரணத்திலிருந்து மீட்கும் அரிய பணி அங்கே நடந்து கொண்டிருந்தது. செல்வந்தர்களுக்கு விசேட அறைகளும் நவீன வசதிகளும் உண்டு. ஆனால் இலவச நோயாளிகளுக்கு அது ஒரு நரகம். அந்த நரகத்திற்கு சென்று மீண்டவர்கள் நிறையப் பேர் இருப்பார்கள். சென்று மீளாதவர்களும் சரி சமம் இருப்பார்கள். அங்கே நடமாடும் சோகம், களிப்பு, வேதனை, இன்பம், துயரம், மகிழ்ச்சி, பெருமை, சிறுமை, வெற்றி, தோல்வி, ஏமாற்றம், இறுமாப்பு, இரக்கம், ஆத்திரம், அன்பு, அமைதி, கசப்பு, கனிவு என்று எல்லா மானிட உணர்வுகளும் அதனை ஓர் அற்புத மானிட உலகமாக மாற்றி விடுகின்றன. நாள் தோறும் 50,000 பேர் வந்து செல்லும் இடம். 10,000 பேருக்கு உணவும் சிகிச்சையும் வழங்கப்படுகிறது. அங்கு நடைபெறும் வணிகமும் சூதாட்டமும், குடியும் கும்மாளமும் வேறு பல அனர்த்தங்களும் சொல்லத் தரமன்று. அந்த அற்புத உலகத்தில் நான் ஒரு மாதம் இருந்தேன்.

இந்த ஒரு மாத காலத்தில் என்னைப் பார்க்க பலர் வந்தார்கள். எனக்கும் சென்னையிலுள்ள பலரோடு தொடர்புகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. ஒழுங்காகப் பத்திரிகைகள் கிடைத்தன. புத்தம் புதிய மானுடத் தொடர்புகள் ஏற்பட்டன. நல்ல நண்பர்கள் சுவையான உணவு வகைகள் கொண்டுவந்து தந்தார்கள். பெரிய பொலிஸ் அதிகாரிகள் வந்து பார்த்துப் பேசி ஆலோசனை கூறிச் சென்றார்கள். பொலிஸ் இலாகாவின் ஊழல்கள் பலவற்றைப் பற்றி என்னால் தெரிந்துகொள்ள முடிந்தது. சங்கிலியைக் கழற்றுவதற்கு கைக்கூலி கேட்ட பொலிஸ்காரர்கள் இருந்தார்கள். என்னிடம் கடன் கேட்ட பொலிஸ்காரனும் இருந்தான். பீர் வாங்கித் தரட்டுமா என்று கேட்ட பொலிஸ்காரனும் உண்டு. இரவு நேரங்களில் பாட்டுப் பாடி மகிழ்வித்த பொலிஸ்காரனும் உண்டு. என்னிடம் ஆங்கிலம் கற்ற பொலிஸ்காரனும் உண்டு. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வேவு பார்க்க வரும் உளவுப்பொலிஸ்காரர்கள் எல்லாம் உறவு பூண்டு போயிருக்கிறார்கள். எனது வழக்கறிஞர்கள் வந்தார்கள். எனது பத்திரிகையாள நண்பர்கள் வந்தார்கள். செங்கல்பட்டில் பொழுது போகாமல் இருந்த எனக்கு சென்னைவாசம் ஓயாமல் ஏதாவது நடவடிக்கைகளுடன் தொடர்பு கொண்டிருந்தது. மருத்துவ பரிசோதனைகள், உணவு பரிமாற்றங்கள், பொலிஸ் விசாரணைகள், மருத்துவ பங்கீடுகள் மற்ற நோயாளிகள் பற்றிய விபரங்கள், வார்ட் தொழிலாளர்கள் பிச்சல் பிடுங்கல்கள், ஈவிரக்கமற்ற போக்குகள் என்று இரவு பகலாக சந்தடி மிக்க வாழ்க்கையாகவே அமைந்திருந்தது.

இத்தனையிலும் ஓர் எதிர்பாராத நன்மை ஏற்பட்டது. என்னைச் சங்கிலியால் பிணைத் திருப்பது உச்சநீதிமன்ற விதி முறைகளுக்கு முரணானது, இது ஓர் அப்பட்டமான மனித உரிமை மீறல் என்று எனது வழக்கறிஞர்கள் உயர்நீதிமன்றத்தில் மனுச் செய்தார்கள்.

எனது மனைவி நட்டஈடு கேட்டு மனுச் செய்தார். அது வரைக்கும் எனது பக்க நீதியைக் கேட்க மறுத்து அசமந்தப்போக்கில் நடந்துகொண்டு வந்த தமிழகப் பொலிஸ் துறை பதில் சொல்ல முடியாமல் தத்தளித்தது. அதே சமயத்தில் என்னை தடுப்புக் காவலில் வைப்பதற்கு எவ்வித நியாயமுமில்லை என்ற முடிவுக்கு அரசும் வந்தது.

இப்பொழுது நட்டஈடு மனுவுக்கு பதிலளிக்க முடியாத அரசு தனது கர்வக் குதிரையிலிருந்து இறங்கி வந்தது. நட்டஈட்டு மனுவை மீளப் பெற்றுக்கொண்டால் என்னை உடனடியாக விடுதலை செய்வதாக சமரசம் பேசினார்கள். எங்கள் வழக்கறிஞர்கள் சிறிது தயக்கம் காட்டினார்கள். பிறகு இறுதியாக அப்போதைய சூழ்நிலையில் சமரசம் செய்து கொள்வதே அறிவுடமை என்று பலரும் கருதினார்கள். எனது மனைவி தனது வழக்கை வாபஸ் செய்கிறேன் என்று நீதிமன்றத்தில் கையெழுத்திட்ட உடனே என்னை விடுதலை செய்வதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

என்னை எப்படி அர்த்தமில்லாமல் கொண்டு போய் செங்கல்பட்டில் அடைத்தார்களோ அதே போன்று அர்த்தமில்லாமல் நீங்கள் இங்கிருந்து செல்வதற்கு எந்த தடையுமில்லை என்று கதவைத் திறந்துவிட்டார்கள்.

இந்த எனது அனுபவம் எப்படி சுலபமாக அதிகார துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது என்பதை தெளிவாக எடுத்துக் காட்டியது. மனித உரிமைகள் சர்வ சாதாரணமாக மீறப்படுகிறது. மனிதாபிமானமே மரணிக்கப்படுகின்றது. இப்படிப்பட்ட துர்ப்பாக்கிய பாதுகாப்பற்ற சூழ்நிலையில் நாம் வாழ்கிறோம் என்பது கவலைக்குரியது.

எனினும் எத்தனையோ சங்கடங்களை சந்திக்க நேரிடினும் நீதியும் சட்டமும் வென்றே தீரும் என்ற உண்மையும் வலியுறுத்தப்படுகிறது. ஆனால் அதற்கு நாம் மிக மிக விழிப்பாக இருக்க வேண்டும். அண்மையில் பத்மினியின் மானபங்க வழக்கில் சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட கடுங்காவல் தண்டனை நீதியும் நேர்மையும் நிச்சயம் வெல்லும் என்ற உண்மையை நிலைநாட்டுகிறது. ஆனால் நாங்கள் எவ்வளவு விழிப்போடு இருக்கிறோமோ அந்தளவுக்குதான் வெற்றி நிச்சயம் என்ற உண்மையும் சேர்ந்தே நிறுவப்படுகிறது.

எனது விடுதலைக்காக உணர்வுபூர்வமாக உழைத்த அனைத்து தோழர்களுக்கும், எனது வழக்கறிஞர்கள் டாக்டர் சுரேஸ், அவரது மனைவி , திரு சிறீதர் அவரது மனைவி கீதா, வழக்காடும் பொறுப் பேற்றுக்கொண்ட வழக்கறிஞர் வானமலை, எனக்காக குரல் கொடுத்த அறிஞர்கள் உச்ச நீதிமன்ற நீதிபதி வி.ஆர் கிருஸ்ணய்யர், அமைச்சர் தொண்டமான், பத்திரிகையாளர்கள் முகந் பத்மநாதன், கோபால், கார்மேகம் போன்றவர்களையும் இன்னும் எண்ணற்ற மனித உரிமைக் காப்பாளர்கள் ரவிநாயர், கென்றிடிபேக் போன்றவர்களையும் என்னால் எளிதில் மறப்பதற்கில்லை. பல்வேறு நாடுகளிலிருந்து எனது விடுதலையை வற்புறுத்திய மனித நேயமிக்க மானுட மணிகளை என் நினைவிற் கொள்கிறேன். அநீதிகள் அழியாத வரையில் நம்முடைய உரிமைப் போராட்டங்களும் ஓயப் போவதில்லை.

சிறைவாசம் இத்துடன் நிறைவு பெற்றது. ஆனால் .....?

[முற்றும்]

# இந்த வாரம் உங்களுக்கு...

## மேடம்

சமயோசித புத்தியால் தடைகளெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக விலகும். எதிர்பார்த்த தொகையும் கைக்கு வரும். தாயாரின் உடல் நிலை பாதிக்கும். வாகனச் செலவு அதிகரிக்கும். பிள்ளைகளின் உயர்கல்வி, கல்யாண முயற்சியில் கொஞ்சம் அலைச்சல் இருக்கும். அரச வரிகளை உடனுக்குடன் செலுத்தப் பாருங்கள். நீண்ட நாட்களாகத் தடைப்பட்டு வந்த திருமணம் கூடி வரும். திடீர் பணவரவு உண்டு. கணவன்,மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். பிரிந்திருந்தவர்கள் ஒன்று சேர்வீர்கள். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும்.

## கடகம்

முன்கோபத்தைக் குறைக்கப் பாருங்கள். ஓரளவு பணவரவு அதிகரிக்கும். தடைகள் நீங்கும். புது முயற்சிகளும் பலிதமாகும். சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். உங்களுடைய திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிட்டும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். புது வாய்ப்புகளும் தேடி வரும். கலைத்துறையினர் புதுமையாக சில படைப்புகளை வெளியிட்டு அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

## துலாம்

கடுமையாக உழைப்பீர்கள். உங்கள் செல்வாக்குக் கூடும். பண வரவும் திருப்திகரமாக இருக்கும். தந்தை வழியில் வர வேண்டிய தொகையும் வரும். பூர்வீகச் சொத்துப் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும். பாகப்பிரிவினையும் நல்ல விதத்தில் முடியும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து இலாபம் பெறுவீர்கள். வர வேண்டிய பாக்கிகளைப் போராடி வசூலிப்பீர்கள். மறைமுகப் போட்டிகளை சமாளிப்பீர்கள். வேலையாட்களின் ஒத்துழைப்பு சுமாராக இருக்கும். வாடிக்கையாளர்களின் மனங்கோணாமல் நடந்து கொள்ளுங்கள்.

## மகரம்

இனம்தெரியாத ஒரு பயம் அடிமனதில் இருந்துக் கொண்டேயிருக்கும். கால் மற்றும் கழுத்து வலி வரும். அவ்வப்போது உறக்கம் குறையும். அரசியல்வாதிகள் நடுநிலையாக இருப்பது நல்லது. பெண்கள் திறமையான வகையில் செயல்படுவீர்கள். மாணவர்கள் விளையாட்டு, கட்டுரைப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு, பாராட்டைப் பெறுவீர்கள். வியாபாரத்தில் இரட்டிப்பு இலாபம் உண்டு. பழைய கடன்களைக் கறாராகப் பேசி வசூலிப்பீர்கள். வாடிக்கையாளர்களை அதிகப்படுத்த விளம்பர யுக்திகளை கையாளுவீர்கள்.

## இடபம்

எதையும் முன்யோசனையுடன் செய்யப் பாருங்கள். இலாபம் சுமாராக இருக்கும். வாடிக்கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். அரசியல்வாதிகள் பொதுக் கூட்டம், போராட்டங்களில் முன்னிலை வகிப்பீர்கள். பெண்கள் எதிர்பார்த்தவை சில தள்ளிப் போனாலும், எதிர்பாராத வேலைகள் முடியும். மாணவர்கள் கல்யாணம், திருவிழா என்று அலையாமல் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். கெட்ட நண்பர்களிடமிருந்து விடுபடுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.

## சிம்மம்

மூளையை மூலதனமாக்கி முன்னேறுவீர்கள். தோல்விகளைக் கண்டு துவள மாட்டீர்கள். அலைச்சல், செலவுகள் இருக்கும். ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச்சுமை இருக்கும். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். காது, பல் வலி விலகும். உடல் சூட்டால் இருந்து வந்த வறட்டு இருமல் குணமாகும். உங்களால் பயனடைந்தவர்களே உங்களுக்கு எதிராக செயற்படுதல் போன்றவை நிகழும். இரகசியங்களை வெளியிட வேண்டாம்.

பெண்கள் தவறான எண்ணங்களுடன் பழகியவர்களை ஒதுக்கித் தள்ளுவீர்கள். தாயாரை தவறாகப் புரிந்துக் கொள்ளாதீர்கள்.

## விருச்சிகம்

பணப்புழக்கம் உண்டு. திருமணப் பேச்சு வார்த்தை சுமுகமாக முடியும். வீடு கட்டும் பணியைத் தொடர்வீர்கள். வீடு கட்ட வங்கிக் கடன் கிடைக்கும். பழுதான மின்சார சாதனங்கள், சமையலறைச் சாதனங்களை மாற்றுவீர்கள். இளைய சகோதரர் வகையில் உதவிகள் உண்டு. வாகனம் வாங்குவீர்கள். பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகளை கிளறிக் கொண்டிருக்காதீர்கள். வழக்குகள் தாமதமாகும். அலைச்சல்கள், திடீர் பயணங்கள் அதிகரிக்கும். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளுங்கள்.

## கும்பம்

வெளிமாநிலப் புண்ணிய ஸ்தலங்களுக்கும் சென்று வருவீர்கள். நீண்ட நாள் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். பழைய சிக்கல்களில் இருந்து விடுபடுவீர்கள். பழைய கடனில் ஒரு பகுதியை வசூல் செய்வதற்கான வழி கிடைக்கும். நல்லவர்களின் நட்பு கிட்டும். தவறாக வழி நடத்தியவர்களிடம் இருந்து விடுபடுவீர்கள். நண்பர்கள், உறவினர்களின் அன்புத் தொல்லை அதிகமாகும். பழைய நண்பருடன் மனஸ்தாபம் வரக்கூடும். அரசியல்வாதிகள் பொதுக்கூட்டம், போராட்டங்களில் முன்னிலை வகிப்பீர்கள்.

## மிதுனம்

நெருக்கடி நேரத்திலும் பதற்றப்படாமல் பணியாற்றுவீர்கள். அடிமனதில் இருந்த தாழ்வு மனப்பான்மை விலகும். வீண் விவாதங்களை எல்லாம் தவிர்ப்பீர்கள். குடும்பத்தில் உங்களுக்கு முக்கியத்துவம் கிடைக்கும். உங்களுடைய ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வீடு, மனை வாங்குவது, வீடு கட்டுவது நல்ல விதத்தில் முடியும். வாகனம் வாங்குவீர்கள். குழந்தை பாக்கியம் கிடைக்கும். பூர்வீகச் சொத்து பங்கு கைக்கு வரும். வெற்றி பெற்ற மனிதர்களின் நட்பு கிடைக்கும்.

## கன்னி

அன்புக்கு அடிமையாவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். எதிர்ப்புகள் நீங்கும். வழக்குகள் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். மகனுக்கு இருந்து வந்த கூடாப் பழக்க வழக்கங்கள் விலகும். வெளிநாடு செல்ல சந்தர்ப்பம் கிடைக்கும். வீட்டில் அடுத்தடுத்து நல்லது நடக்கும். விருந்தினர், உறவினர் வருகையால் வீடு களை கட்டும். உயர்ரக ஆடை, ஆபரணம் வாங்குவீர்கள். பூர்வீகச் சொத்துப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிடைக்கும். வாகனம் வாங்குவீர்கள்.

## தனுசு

உங்கள் அழுத்தமான கொள்கையாலும், ஆழமான பேச்சாலும் அடுத்தவர்கள் மனதில் இடம்பிடிப்பீர்கள். அரச விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். வங்கிக் காசோலையில் முன்னரே கையொப்பமிட்டு வைக்காதீர்கள். பழைய சொத்து விற்பதன் மூலமாகவோ, பாகப்பிரிவினை மூலமாகவோ பணம் வரும். விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள். சிலர் பழைய நகையை மாற்றி புது டிசைனில் நகை வாங்குவீர்கள். எதிர்பார்த்த வங்கிக் கடன் கிடைக்கும். வெளியூர் பயணங்களால் புது அனுபவம் உண்டாகும்.

## மீனம்

உங்களுடைய அணுகுமுறையை மாற்றிக் கொள்வீர்கள். சிலர் வீடு மாறுவதற்கான முயற்சியில் இறங்குவீர்கள். சமையலறையை நவீனப் படுத்துவீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல்களும், பிரச்சினைகளும், செலவுகளும் இருக்கும். பிள்ளைகளிடம் கனிவாகப் பேசுங்கள். உங்களுடைய கோபத்தை, ஏமாற்றத்தை எல்லாம் அவர்களிடம் காட்ட வேண்டாம் தவிர்க்க முடியாத பயணங்கள் வரும் பிள்ளைகள் கோபப்படுவார்கள். எதிர்த்துப் பேசுவார்கள்.

## இளமைத் தோற்றத்துக்கு எண்ணெய் மசாஜ்!



முதுமைத் தோற்றத்தைத் தடுக்க எண்ணெய் மசாஜ் மிகவும் அவசியம். எண்ணெய் மசாஜ் செய்து உங்கள் இளமையைத் தக்க வைத்துக் கொள்வது உங்கள் கையில் தான் இருக்கிறது. முதுமை பல காரணங்களால் ஏற்படுகிறது. அதற்கு நாம் உண்ணும் உணவுகளும் ஒரு வகைக் காரணம். அதுமட்டுமல்லாமல் சருமத்துக்கு ஏற்ற முறையான பராமரிப்பும் இல்லை. அதிலும் குழந்தை பிறந்து விட்டால் சருமம் சற்றுத் தளர்ந்தது போலத் தோற்றமளிக்கும். தளர்வை சரி செய்ய முதுமை தோற்றத்தைத் தடுக்க எண்ணெய் மசாஜ் மிகவும் அவசியம்.

**திராட்சை எண்ணெய்:**

இந்த எண்ணெயில் விற்றமின் ஈ அதிகம் உள்ளது. ஆகவே சருமம் எப்போதும் ஈரப்பதத்துடன் இருக்கும் அது மட்டுமல்லாமல் திராட்சை எண்ணெயில் மசாஜ் செய்தால் சருமத் தளர்ச்சி நீங்குவதோடு ஏதேனும் தழும்புகள் இருந்தாலும் நாளடைவில் மறைந்து விடும். முகம் நன்கு பொலிவோடு இருக்கும். எந்த வயதிலும் இளமையாக இருக்க விரும்புபவர்கள் இந்த மசாஜைச் செய்தால் முகச் சுருக்கம் நீங்கி இளமையாகத் தெரிவீர்கள்.

**நல்லெண்ணெய்:**

உடலுக்குச் செய்யும் மசாஜூக்குப் பயன்படுத்தும் எண்ணெயில் மிகவும் சிறந்தது நல்லெண்ணெய் தான். சில நேரங்களில் எண்ணெய் மசாஜ் பருக்களை ஏற்படுத்தும். ஆனால், நல்லெண்ணெயைப் பயன்படுத்தினால் எந்த ஒரு பிரச்சினையும் வராது. இந்த எண்ணெய் சருமத்தில் ஏற்படும் பருக்களை நீக்கி விடும்.

# குறுக்கப்படும் பெண் வெளி

(கடந்த வாரத் தொடர்ச்சி)

'என் வீட்டுப் பொண்ணா இருந்தா வெட்டிப் போட்டிருப்பேன். பொண்ணை வளர்த்திருக்கற லட்சணத்தைப் பாரு' என்று பெண்ணைப் பெற்றவர்களைப் பார்த்துக் கொக்கரிக்கும் பலரும் பெண்களை வஞ்சித்து, குற்றச் செயலில் ஈடுபட்ட ஆண்களின் பெற்றோரைப் பற்றி எதுவும் சொல்வதில்லை. போனால் போகிறதென்று யாருக்கும் வலிக்காமல் இரண்டொரு சொல் வீசப்படுகிறது. சாண் பிள்ளையாக இருந்தாலும் அவர்கள் எல்லாம் ஆண் பிள்ளை என்று தானே இச்சமூகம் போற்றுகிறது.

அநீதி இழைக்கப்பட்ட பெண்களுக்கு விரைவில் நியாயம் கிடைத்துவிடும், அந்தப் பெண்களின் அடையாளம் காக்கப்படும், துயரிலிருந்து மீண்டு எழ அந்தப் பெண்களுக்கு வழிவகை செய்துதரப்படும், குற்ற மிழைத்தவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்பட்டுவிடும், அந்தத் தண்டனைதான் குற்றம் புரிய நினைக்கிறவர்களைத் தடுக்கும் என்பது போன்ற பகல் கனவுகளுக்கு நாம் பழகிவிட்டோம்.

அதேபோல் எது நடந்தாலும் களப் போராளிகளோ பெண்ணிய அமைப்புகளோ பார்த்துக்கொள்வார்கள் எனப் பொதுச் சமூகம் ஒதுங்கிக்கொள்கிறது. நம்முடைய அதிக பட்ச செயற்பாடு, பாதுகாப்பான இடத்தில் நின்றுகொண்டு கருத்துக் களமாடுவதாகவே இருக்கிறது.

### இதையும் கடந்து வருவோம்

ஆணையும் பெண்ணையும் சமமாக வளர்ப்போம் என்று சொல்லிக்கொண்டிருப்பதால் மட்டுமே எந்தப் பலனும் விளைந்துவிடப் போவதில்லை. ஆண் மையச் சிந்தனையிலிருந்து ஆண்களோடு பெண்களும் சேர்ந்தே வெளிவரும்போதுதான் சமத்துவ வளர்ப்பு சாத்தியப்படும். அது இல்லாதபோது பெண்கள், ஆண்கள் நுகர வேண்டிய பண்டங்களாக மட்டுமே நடத்தப்படுவார்கள்.



பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நிகழ்வதற்கான அத்தனை சாத்தியங்களை யும் இந்தச் சமூகம் உருவாக்கி வைத்திருக்கிறது. இப்படியான சமூகத்தில் நம் வீட்டுப் பெண்களை அடங்கி இரு, ஒடுங்கி இரு எனக் கண்டிப்பதைவிட எந்தச் சூழலையும் எதிர்கொள்ள அவர்களைப் பழக்குவதுதான் இன்றைய அவசியத் தேவை. நெருக்கடியான சூழலை எதிர் கொள்வதற்கான மனோதிடம் முதலில் நம்மிடம் இருக்கிறதா என்ற கேள்வியையும் சேர்த்தே கேட்டுக்கொள்வோம்.

பெண்ணின் உடலில்தான் அனைத்துமே அடங்கியிருக்கிறது என்ற மனநிலையிலிருந்து நாம் வெளியே வர வேண்டும். அப்படியொரு தெளிவு இருந்திருந்தால் வீடியோவைக் காட்டி மிரட்டப்பட்டபோதே, அந்தப் பெண்கள் துணிந்து அனைத்தையும் தங்கள் குடும்பத்திடம் சொல்லியிருப்பார்கள்.

ஆனால், நம் சமூகம் அப்படிப்பட்ட பரந்துபட்ட பார்வையோடு குழந்தைகளை வளர்ப்பதில்லை. 'உடலில்தான் மானம் இருக்கிறது. மானம் போனால் எல்லாமே போச்சு" என்ற பிற்போக்குச் சிந்தனையை ஊற்றி வளர்க்கிறது. அதிலிருந்துதான் குற்றங்கள் தொடங்குகின்றன.

### சமூகத்துக்குக் கொடுத்த பதிலடி

அறிவுரை சொல்வது எளிது. அந்த நிலையில் இருப்பவர்களுக்குத்தானே அந்த வேதனை புரியும் என்பதெல்லாம் கட்டுக்கதை. அதை ஏன் வேதனையாக நினைக்க வேண்டும் என்பதுதான் இங்கே கேள்வி. டேனிஷ் பெண் பத்திரிகையாளர் எம்மா ஹோல்டன், தன் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறையை அப்படித்தான் கடந்துவந்தார். அவரது நிர்வாணப் படங்களை யாரோ சிலர் திருடி, இணையத்தில் உலவவிட்டனர்.

அவற்றுக்குக் கீழே கொச்சையான கருத்துகளைப் பதிவிட்டனர். எம்மாவும் முதலில் உடைந்துதான் போனார். ஆனால், தன் பங்கு எதுவுமே இல்லாத அந்தச் செயலுக்குத் தான் ஏன் வருந்த வேண்டும் என நினைத்தார். தொழில்முறை பெண் புகைப்படக் கலைஞரை அழைத்தார்.

ஆண்களின் கண்களுக்கு விருந்தாக இல்லாமல் பெண்ணின் வலியைப் பேசும் விதத்தில் தன்னை நிர்வாணமாகப் படமெடுக்கச் சொன்னார். அவற்றை அவரே இணையத்தில் பதிவிட்டார். தன்னுடலைக் கொத்தித் தின்ற சமூகத்துக்குத் தன் செயல்மூலம் பதிலடி கொடுத்தார் எம்மா. இது நடந்து மூன்று ஆண்டுகளாகின்றன.

ஏதோவொரு நம்பிக்கையின் அடிப்படையில்தான் பெண்கள் தங்கள் அந்தரங்கத்தை ஆண்களிடம் பகிர்ந்துகொள்கிறார்கள். அந்த நம்பிக்கையை ஆண்கள் சிதைத்தால் அது ஆண்களின் குற்றமே தவிர, பெண்கள் அதனால் குற்றவுணர்வுக்கு ஆளாகத் தேவையே இல்லை. இதைப் பெண்கள் மட்டுமல்ல பெண்களைப் பெற்றவர்கள் மட்டுமல்ல ஆண்களும் ஆண்களைப் பெற்றவர்களும் உணர வேண்டும். ■




ஜோதியின் அக்கறையுடன் கூடிய திறமையைப் பார்த்த யுவகேந்திரா அவளை மண்டல பொறுப்பாளராகப் பணி நியமனம் செய்தது ஊரைச் சுற்றியிருந்த பல கிராமங்களுக்கும் சென்று எழுத்தறிவித்தாள். சம்பளம் 190 ரூபாவாக உயர்ந்தது. இரவு நேரங்களில் பெட்டி கோட் தைக்கத்தொடங்கினாள். நிறைய படிக்க வேண்டுமென்ற ஆசை மீண்டும் துளிர்விடவே அம்பேக்கார் திறந்த கல்கலைக்கழகத்தில் தபால் மூலம் படித்து 1994இல் பி.ஏ.பட்டம் பெற்றுக்கொள்ளவே அரசு பள்ளி ஒன்றில் பயிற்சி ஆசிரியையாக வேலை கிடைத்தது. சம்பளம் 400 ரூபா. தினமும் வேலைக்கு ரெயினில் இரண்டு மணி நேரம் பயணிக்க வேண்டியிருந்தது. அந்த இரண்டு மணி நேரப் பயணத்தை வீணாக்கவில்லை. சக பயணிகளுக்கு சேலை விற்கும் பணியைச் செய்யத் தொடங்கினாள். ஒரு சாறி விற்றால் 20 ரூபா இலாபம் கிடைக்கும். எப்படியும் ஒரு நாளைக்கு நாலு சாறியாவது விற்றுவிடுவாள். தொடர்ந்து படித்ததில் கட்டியா யூனிவர்சிட்டியில் 1997இல் எம்.பி.ஏ. பட்டமும் கைகூடியது. அரசாங்கப் பாடசாலையொன்றில் ஆசிரியை வேலையோடு 6,000 ரூபா சம்பளவும் கிடைத்தது.

கடவுள் கொஞ்சமாய் கண் திறக்கவே கஷ்டங்களும் குறைந்தது. ஒரு சிறிய வீட்டை வாடகைக்கு எடுத்துத் தன் குழந்தைகளோடு குடியேறினாள். அப்போது ஜோதியின் உறவுக்காரப் பெண் ஒருத்தி அமெரிக்காவில் இருந்து வந்திருந்தார். ஆடம்பரமான கார், கண்களில் குளு குளு சண் கிளாஸ், மிடுக்கான ஆடை என்று அவரைப் பார்த்ததும் "இவளும் நம் ஊர்ப் பெண்தானே. நானும் இவளைப் போல் ஏன் அமெரிக்கா போகக் கூடாது?" என்று ஆசை மனதில் வேர் விட்டது. ஆசை ஆரை விட்டது? ஜோதியையும் தொட்டு நின்றது. அமெரிக்கா போக வேண்டும். அங்கேயே செட்டில் ஆக வேண்டுமென்று நினைப்பை மட்டுமல்ல, முடிவையே எடுத்தாள். கம்பியூட்டர் சம்பந்தமாக நிறைய கோர்ஸ்களை வேலை செய்தபடியே படித்து முடித்தாள். வேலையில் கிடைத்த வருமானத்தில் கொஞ்சப் பணத்தை மாதா மாதம் சேமிக்க ஆரம்பித்தாள்.

இந்தியாவின் தெலுங்கானா மாநிலத்தின் வாரங்கல் மாவட்டத்தில் உள்ள பின் தங்கிய கிராமமான நரசிம் ஹூலா கூடம் என்ற இடத்தில் பிறந்தாள் ஜோதி ரெட்டி. இவளது அமெரிக்க ஆசையைச் சுற்றி இருந்தவர்கள் எல்லோருமே, "உனக்கு இது தேவையா?" என்று கிண்டல் செய்தார்கள். ஆனால். எதற்கும் அவள் அசரவில்லை. "அமெரிக்கா, அமெரிக்கா" என்று தூக்கத்திலும் உளரத் தொடங்கினாள். கலிபோர்னியாவில் இருந்த அவளது நண்பி ஒருத்தி வேலை வாய்ப்புக்கான ஒஃபர் ஒன்றை அனுப்பி வைக்கவே, முதலில் அலைந்த திரிந்து பாஸ்போட்டை வாங்கிக்கொண்டாள். ஆனால் விசா கிடைப்பதுதான் குதிரைக் கொம்பாயிருந்தது. மிகப்பெரிய போராட்டத்துக்குப் பிறகு களைத்துப் போன நிலையில் விசா கிடைத்தது. தன் இரு பெண் குழந்தைகளையும் பாதுகாப்பான ஹொஸ்டல் ஒன்றில் சேர்த்து விட்டுத் தன்னந்தனியாக 2000ஆம் ஆண்டு மே மாதம் அமெரிக்காவுக்கு விமானமேறினாள்.

பெரிசோ, சின்னனோ கிடைத்த வேலை எதுவானாலும் செய்யத் தொடங்கினாள். கெஸ் ஸ்டேசன், வீடியோ ஷொப், பேபி ஸிட்டராக பல வேலைகளைச் செய்ததில் தூக்கம் தொலைந்தது. அமெரிக்க வாழக்கை முறை மெல்ல மெல்ல பிடிப்பு ஆரம்பித்தது.

(இன்னும் வருவாள்)

**கவிஞர் பிறேம்ராஜ், கொழும்பு**

# தனியொருவன்

## அடங்கா தமிழன்

■ அடிமைத் தமிழன்

**அடங்காத்தமிழன் என அழைக்கப்பட்ட பேராசிரியர் சுந்தரலிங்கம் இலங்கை சட்டசபையில் உறுப்பினராக இருந்து, இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் 1948 முதல் 1960 வரை நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தவர். சுந்தரலிங்கத்தின் சாதனைகள் எங்குமே ஆவணப்படுத்தப்படவில்லை. அடங்காத் தமிழனின் சாதனைகளை எதிரொலி வாசகர்களுக்காக வாராந்தம் தருகிறார் அடிமைத்தமிழன்.**

1972 *Present :* H. N. G. Fernando, C.J., G. P. A. Silva, S.P.J., and Alles, J.

C. SUNTHARALINGAM, Petitioner, *and* THE ATTORNEY-GENERAL and 2 others, Respondents

*S. C. 1 of 1972—Application for Injunction*

*Injunction—Proceedings of Constituent Assembly—Supreme Court cannot order discontinuance of such proceedings.*

In an application to obtain an injunction to prevent and prohibit the Minister for Constitutional Affairs "from taking any steps to repeal the Ceylon (Constitution and Independence Orders-in-Council, 1946 and 1947) and to substitute therefor a Constitution entitled a 'Constitution of Sri Lanka'"—

*Held,* that a Court cannot consider the validity or otherwise of a new Constitution, unless and until a new Constitution is established or purported to be established.

APPLICATION for an Injunction against the Attorney-General and the Minister for Constitutional Affairs.

*C. Suntharalingam,* the relator-petitioner, in person.

*Cur. adv. vult.*

1972ஆம் ஆண்டு இலங்கை குடியரசாக்கப்பட்ட போது பௌத்தத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதுடன் சோல்பரிஅரசியல் யாப்பில் இருந்த இருந்த சிறுபான்மை மக்களைபாதுகாக்கும் 29ஆவது ஷரத்து நீக்கப்பட்டது. இந்த இலங்கைக் குடியரசு அரசியல் யாப்பை இடதுசாரிகளும் இணைந்தே உருவாக்கினார்கள். தனிச்சிங்களச்சட்டம் கொண்டு வரப்பட்டபோது ஒரு மொழி, இரு நாடுகள் இரு மொழி ஒரே நாடு என தனிச்சிங்கள சட்டத்தை அமுல்படுத்தினால் இலங்கை இரண்டுநாடுகளாகப் பிளவுபட்டு விடும். சிங்கள நாடு, தமிழ் நாடு என உரையாற்றிய கொல்வின் ஆர்.டீ. சில்வா தான் இந்த 1972குடியரசு அரசியல்யாப்பை தயாரித்தார்.

1972 குடியரசு அரசியல் யாப்பை எதிர்த்து செல்வநாயகம் தனதுநாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தார். சுந்தரலிங்கம் பிரிவி கவுன்சில் என அழைக்கப்படும் பிரிட்டிஷ்மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இலங்கை பிரதமர், சட்டமாஅதிபர், நீதியமைச்சர் ஆகியோருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தார் இலங்கை குடியரசாவதற்கு முன்னர் இலங்கை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் திருப்தியடையாதவர்கள் பிரிவி கவுன்சிலுக்குமுறைப்பாடு செய்யலாம் என்ற நிலை காணப்பட்டது. 1972குடியரசு அரசியல் யாப்பின் மூலம் இந்த நடைமுறை நீக்கப்பட்டது.

1972 குடியரசு அரசியல் யாப்பு சட்டவிரோதமானது என சுந்தரலிங்கம் பிரிவி கவுன்சிலில் வழக்கு தாக்கல் செய்தார். இந்த அரசியல் யாப்பு இன்னும் அமுலுக்கு வரவில்லை இதுநிறைவேற்றப்பட்ட பின்னர் வழக்கை தாக்கல் செய்யுங்கள் எனக்கூறி பிரிவி கவுன்சில் சுந்தரலிங்கத்தின் மனுவை நிராகரித்தது.

இலங்கை அரசாங்கம் 1972 குடியரசு அரசியல்

H. N. G. FERNANDO, C.J.—*Suntharalingam v. The Attorney-General* 127

February 7, 1972. H. N. G. FERNANDO, C.J.—

The purpose of this Application is to obtain an injunction from this Court to prevent and prohibit the Minister for Constitutional Affairs "from taking any steps to Repeal the Ceylon (Constitution and Independence Orders-in-Council, 1946 and 1947) and to substitute therefor a Constitution entitled a 'Constitution of Sri Lanka'."

The same petitioner made a previous application naming as respondents the Honourable Sirimavo R. D. Bandaranaike and the other members of the Cabinet. In that application the petitioner sought orders restraining the respondents from conducting the proposed proceedings of the Constituent Assembly as convoked and created by a Resolution of the members of the House of Representatives passed on 19th July, 1970. That application was refused by my judgment dated 13th February, 1971, my brother Wijayatilake agreeing. The Privy Council thereafter refused leave to appeal from that judgment without reasons stated. In these circumstances it has to be assumed that the Privy Council confirmed or adopted the reasons stated in the former judgment for the refusal of the petitioner's previous application, and we therefore considered ourselves bound by that judgment.

The operative passage in the former judgment, which indeed has been relied on by the petitioner on the present occasion, is the following :—

> "If and when such a new Constitution is established or is purported to be established, one of two possible situations will in my opinion exist :—
>
> (1) That the new Constitution is a legal and valid instrument which will in law supersede the Constitution and Independence Orders-in-Council which are presently law ; in which event a challenge of the validity of the new Constitution will be fruitless.
>
> (2) *Alternatively,* if the true position be, that the new Constitution established by the Constituent Assembly does lack legal force and validity, and if a competent Court will have jurisdiction so to pronounce, the occasion for the making of such a pronouncement can arise only after the Constitution is established or purports to be established, and only in a proceeding in which the validity of some provision of the Constitution properly and actively arises for determination."

It is clear from this passage that the ground for the refusal of the previous application was that a Court cannot consider the validity or otherwise of a new Constitution, unless and until a new Constitution is established or purported to be established. That contemplated event has not yet occurred.

The petitioner has relied on the provision contained in s. 48 (2) of the draft of a new Constitution which has been published in the Gazette of 29th December, 1971, and he has submitted that the position has materially altered in view of that provision. This submission has apparently

128 *Plate Ltd. v. Ceylon Theatres Ltd.*

found favour with one of the two Judges who made a preliminary order on this application on 21st January, 1972. The draft Section 48 (2) provides as follows :—

> "No institution administering justice nor any other institution, person or authority shall have the power to inquire into or pronounce upon the validity of any law of the National Assembly."

If this draft provision does eventually become operative, its effect will be that no Court will have power to declare *any law of the National Assembly to be invalid.* The petitioner is apparently of the view that this draft provision will preclude also a challenge of the validity of the proposed new Constitution ; and it is in anticipation of this possible event that the petitioner claims that the position has "materially altered", and that the alternative mentioned in paragraph (2) of the passage in my former judgment will not be available.

The alternative there stated is the possibility of the new Constitution being declared invalid *if a competent Court will have jurisdiction so to pronounce.* This statement clearly contemplated the possible position that a court may not have such a jurisdiction. It is therefore not correct to say that there is or will be any altered position which the former judgment did not take into consideration.

Hence the grounds on which the petitioner's previous application was dismissed apply equally in the case of his present application. In both cases his purpose is the same, namely to prevent the new Constitution from being established or being purperted to be established.

For these reasons we dismissed the application.

SILVA, S.P.J.—I agree.

ALLES, J.—I agree.

*Application dismissed.*

யாப்பின் மூலம்பிரிவி கவுன்சிலின் அதிகாரத்தை இரத்து செய்து விட்டது.

இரண்டாவது தடவை சுந்தரலிங்கம் மனுத் தாக்கல் செய்த போது இலங்கை குடியரசாகி விட்டது இனி நாங்கள் இறைமையுள்ள ஒருநாட்டு நிர்வாகத்தில் தலையிட முடியாது என பிரிவி கவுன்சில் தீர்ப்பளித்தது. இந்த வழக்கு பற்றிய விபரம் தெரிந்தவர்கள் தமக்கு தெரிந்த விபரங்களை எதிரொலி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம்காரணம் இது ஒரு சரித்திரப் பிரசித்தி பெற்ற வழக்கு. இந்த வழக்குபற்றிய விபரங்களை இணையத்திலோ நூல்களிலோ பெற்றுக்கொள்ள முடியவில்லை. 1972 குடியரசு அரசியல் யாப்பை எதிர்த்து செல்வநாயகம் சுவரொட்டி ஒட்டியதை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுஎன முகநூல்களில் சிலர் பதிவிட்டுள்ளார். ஆனால் சுந்தரலிங்கம் தனி ஒருவனாக நின்று லண்டனுக்குச்சென்று பிரிவி பிரிவிகவுன்சிலில் வழக்குத் தாக்கல் செய்ததைப்பற்றி ஒருவரும் பேசுவதில்லை.

# "விசக்கிருமிகள்"



● நவீன சவாரித்தம்பர்

வன்னியில நடந்த போராலை வாழ்க்கையில பாதிக்கப்பட்டு நிக்கிற ஆக்கள் எக்கச்சக்கம் எண்டதை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய தேவை இல்லைக்கண்டியளோ! ஏனெண்டால் அது பெரும்பாலும் வெளியுலகத்துக்கு தெரிஞ்சும் தெரியாமலும் நடந்த போர். இந்தப் போருக்குள்ளை உடம்பிலை காயப் பட்டு கைகால் இல்லாமல் இருக்கிற ஆக்கள் இஞ்சை கனபேர் எண்டதும் உங்களுக்குத் தெரிஞ்சவிசயம்..

இந்தக்கனபேரிலை ஒருசில பேர், இந்தப் போர் வந்தது ஒரு வகையில தங்களுக்கு நல்லதுதான் எண்டமாதிரி, அவையளின்ரை வாயளும் செய்கைகாரியங் களும் நடப்பித்துக் கொண்டிருக்கிறதை நான் என்ர கண்ணாலை பாத்துக்கொண்டிருந்ததை நினைக்க, இந்த நாட்டிலை ஒருதமிழனாய் பிறந்ததே ஒருசாபக் கேடோ எண்டு நினைக்க வேண்டிக் கிடக்குது.

'ஷெல்பீஸ்' உடம்பிலைபட்டு கையில்லாமல், காலில்லாமல் போயிட்டுதுகளே...எண்டு, கனபேரைப் பாத்து நான் கவலைப்பட்டிருக்கிறன். எனக்குள்ளை அழுதுமிருக்கிறன். ஆனால், இப்ப பொது வெளியில இப்பிடிக் கைகால் இல்லாத ஆக்கள் 'கிளச்செஸ்' (ஊன்று கோல்) மூலமா நடந்துபோறதைப் பாக்கேக்கை, எனக்கு இரக்கம் வருகுதில்லை. எரிச்சலும் அருக்களிப்பும்தான் வருகுது பாருங்கோ! ஏனெண்டால், அந்தளவுக்கு இவையள்ளை மனம் வெறுத் துச் சலிச்சுப்போயிட்டுது.

போர் நல்ல அமளியாக நடந்த புதுக்குடியிருப்புப் பக்கத்திலை, ஒரு பொடியனுக்கு தொடையோடை கால் இல்லாமல் போயிட்டுது. பொடியன்ர தாயும், தாயின்ர சகோதரியும் வெடிச்ச ஷெல்லுக்குள்ளை சிதறிப்போச்சினம். இதை அந்தப் பொடியன்ர மாமன்காரன் அறிஞ்சு, சரியாக் கவலைப் பட்டான்.

இந்த நிலையிலை, பொடியனுக்கு ஏற்கனவே தகப்பன் இல்லை. இப்ப தாயும் இல்லை எண்ட அனுதாபத்திலை, மாமன்காரன் எல்லா விதத்திலும் ஆதரவாக இருந்தான். ஒருநாள் மாமனுக்கும் மருமோனுக்கும் ஏதோ காசுப்பிரச்சினையில வாய்த் தர்க்கம் முத்திப்போக, பொடியன் வயசுக்கு மூத்தவன் எண்டும் பாராமல், தன்னுடைய 'கிளெச்செஸ்'சாலை மாமனுக்கு அடிச்சுப்போட்டான். மாமன் இதைக் கொஞ்சம் கூட எதிர்பார்க்கேல்லை. அவன் வாயிலை வந்தபடி அறம்புறமாப் பேசிப்போட்டுப் போயிட்டான்.

பொடியன்ர கூட்டாளிமார் சிலபேர், மாமனுக்கு அடிச்சது தவறு எண்டதை அவனுக்குச் சுட்டிக்காட்டி யிருக்கினம். அதுக்கு அந்தப் பொடிப் பயல் என்ன சொன்னவன் தெரியுமே?

"இனி என்னை எந்தக் கொம்பனும் ஒண்டுஞ் செய்யேலாது. நான் என்ர கால் இல்லாத தொடையைக் காட்டி தப்பிச்சுக்கொள்ளுவன்".

இது எப்பிடியிருக்கு பாத்தியளே! நீதி, சட்டம், ஒழுங்கு, விசாரணை எண்டதெல்லாம் ஒருபுறம் கிடக்க, முதல்லை இந்தச் சமூகம் 'கால் இல்லாதவன்' , ' கை இல்லாதவன்' எண்டுதான் பாக்க வெளிக்கிடும். இப்படிப்பட்ட ஆக்களுக்கு ஆராவது அடிச்சால், அடிச்சவனைத்தான் அது திருப்பி அடிக்கும். சமூகத்தின்ர இந்தப்பலவீனத்தைப் புரிஞ்சு கொண்டுதான், அந்தப்பொடியன் தன்ர மாமனுக்கு அடிச்சிருக்கிறான். இது உதாரணத்துக்கு ஒண்டு. இதைப்போல பஸ்சுக்குள்ளை, பொது இடங்களிலை பல சம்பவங்களை நான் நேரிலை பாத்திருக்கிறன்.

போர் முடிஞ்சு வருசங்கள் போய்த் துலைஞ்சாலும், இன்னமும் எங்கட சனங்களுக்கு விடிவு எண்டது இல்லை. நிலைமை இப்படியிருக்க, இப்ப புதிசா ஒரு பிரச்சினை உருவாகிறமாதிரி எனக்குத் தெரியுது. உடம்பில அங்கங்கள் அறுபட்டுப்போன இடங்களைக் காட்டி, நாங்கள் என்ன ஆட்டமும் ஆடலாம் என்கிறதான ஒரு மனோபாவம் கனபேருக்கு வளர்ந்து நிக்குது.

போராலை தங்கட உடம்பிலை ஏற்பட்டிருக்கிற வடுக்களைக் காட்டி யாசகம் செய்யிற கூட்டம் ஒருபுறம் திரியுதுகள். இன்னொருபக்கத்திலை இன்னமும் அனுதாபம் தேடி தங்கட வயித்தை நிரப்புது ஒரு கூட்டம். வேறொரு புறத் திலை மனசிலை ஓர்மம் கொண்டு, எங்களை இந்த நிலைமைக்கு ஆளாக் கினவனுக்கு முன்னாலை வாழ்ந்து காட்ட வேண்டுமெண்ட வைராக்கியத்தோடை வாழுதுகள் ஒருகூட்டம். இவையளுக்கு நடுவிலதான் நான்சொன்ன பொடியனைப் போல ஆக்கள் சண்டித்தனமும் சர்வாதிகாரமும் காட்டின படி, " போர் வந்தது எங்களுக்கு நல்லதாப் போச்சுது" எண்டு புலம்பித் திரியுதுகள்.

நீதி, நியாயம், இரக்கத்தன்மை எண்டதெல்லாம் 2009, மே மாதத்தோடை கெட்டுப்போய்கிடக்கிற எங்கட நாட்டின்ர வடக்குக் கிழக்கில, 'மாற்றுவலுவுள்ளோர்' அடைமொழி தகுதிநிலைக்குள்ளை இருந்து கொண்டு, "நாங்கள் எதுவும் செய்யலாம். அப்பிடிச் செய்தால், எங்கட ' உடல்நிலை'யைப் பாத்து எங்களை விட்டிடுவினம் " எண்ட நினைப்போடை சீவிக்கிற இந்த ஆக்கள் சமூகத்தில இன்னொரு 'விசக்கிருமியள்' எண்டுதான் சொல்லவேணும். இப்படிப்பட்ட ஆக்களைப் பாத்து இரக்கப்பட்ட ஒரு காலத்தையும்மீறி, இப்ப மாற்றுவலுவுள்ள ஆக்கள் எல்லாரையும் சந்தேகிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியிட்டுது. இதாலை அனுதாபத்துக்குரிய ஆக்கள் மனதள வில நல்லாப் பாதிக்கப்படுவினம் எண்டது வெளிப்படையான விச யம் கண்டியளே! ■

# ஆனந்தபுரத்து ஆகுதி



வடபோர்முனை கட்டளைத்தளபதி பிரிகேடியர்
தீபன் / சிவதீபன் [வேலாயுதபிள்ளை பகீரதகுமார்]

பிறப்பிடம் : கண்டாவளை – கிளிநொச்சி
பூர்வீகம் : தென்மராட்சி – வரணி
கல்வி : க.பொ.த உயர் தரம் – சாவகச்சேரி இந்துக் கல்லூரி
இயக்கத்தில் இணைவு : 1984
முதற்பணி : துணைத்தலைவர் மாத்தையாவின் மெய்ப்பாதுகாவலர்
1987 : கிளிநொச்சி மாவட்ட இராணுவப் பொறுப்பாளர்
1988 : மன்னார் தவிர்த்து வன்னியின் துணை இராணுவப் பொறுப்பாளர்
1990 : இலங்கை இராணுவத்தின் மாங்குளம் முகாம், கொக்காவில் முகாம் தகர்ப்பு
1991 : ஆனையிறவின் மீது ஆகாயக்கடல் வெளிச்சமர்
1992 : வன்னிப்பகுதியின் இராணுவத்தளபதி – மண்கிண்டிமலை மீதான இதயபூமி நடவடிக்கை
1993 : யாழ்தேவி முறியடிப்பு சமர்
1993 : பூநகரி மீதான ஈரூடக சமரான தவளைப்பாய்ச்சல்
1995 : இராணுவத்தின் முன்னேறிப்பாய்ச்சலுக்கு எதிரான புலிப்பாய்ச்சல்
1996 : ஓயாத அலைகள் ஒன்று – முல்லைத்தீவு கைப்பற்றல்
1998 : ஜெயசிக்குறு – சத்ஜெய நடவடிக்கைகளுக்கு எதிராக ஓயாத அலைகள் இரண்டு – கிளிநொச்சி கைப்பற்றல்
1999 : ஓமந்தை முதல் முகமாலை – ஓயாத அலைகள் மூன்று
2000 : ஆனையிறவு கைப்பற்றல், ஆனையிறவை மீள கைப்பற்றும் அக்கினிச்சுவாலை முறியடிப்பு (2009 ஜனவரி வரை ஆனையிறவு தக்கவைப்பு)
2000 – 2009 – கிளிநொச்சியில் நிலைகொண்டு வடபோர்முனை கட்டளை தளபதிக்கான பணிகள்
2009 : ஆனந்தபுரம் ஊடறுப்பு சமரில் வீரமரணம்



சோதியா படையணியின் சிறப்புத்தளபதி
பிரிகேடியர் துர்கா [பொன்னுத்துரை கலைச்செல்வி]

பிறப்பிடம் : வலிகாமம் வடக்கு – யாழ்ப்பாணம்
பூர்வீகம் : தெல்லிப்பளை
இயக்கத்தில் இணைவு : 1989 – நான்காவது மகளிர் அணி
1991 : மருத்துவப் பிரிவு துணைப்பொறுப்பாளர்
1993 : பலாலி காவலரண் தாக்கியழிப்பு
1995 : இராணுவத்தின் முன்னேறிப்பாய்ச்சலுக்கு எதிரான புலிப்பாய்ச்சல்
1996 : சோதியா படையணியின் தளபதியாக நியமனம்.
1996 : ஓயாத அலைகள் ஒன்று – முல்லைத்தீவு கைப்பற்றல்
1998 : ஜெயசிக்குறு – சத்ஜெய நடவடிக்கைகளுக்கு எதிராக ஓயாத அலைகள் இரண்டு – கிளிநொச்சி கைப்பற்றல்
1999 : யாழ்ப்பாணத்தை நோக்கிய ஓயாத அலைகள் மூன்று
2000 : ஆனையிறவு கைப்பற்றுதலும்ஆனையிறவை மீளக் கைப்பற்றும் அக்கினிச்சுவாலை முறியடிப்பு
2000 : அக்கினிச்சுவாலை முறியடிப்பில் வயிற்றில் விழுப்புண்
2001 : தேசியத்தலைவரினால் கேணல் தரத்துக்கு நிலைப்படுத்தப் படல்.
மகளிர் பேரவை கூட்ட இணைத்தலைமை : மகளிர் பிரிவின் கீழ் இயங்கி வந்த போர்ப்பயிற்சி, தொலைத்தொடர்புப் பிரிவு, கணினிப் பிரிவு, படையப் புலனாய்வுப் பிரிவு, அரசியல் துறை, புலனாய்வுத்துறை, படையத்தொடக்கப் பயிற்சிக் கல்லூரி, படையறிவியல் கல்லூரி, புகைப்படப் பிரிவு, திரைப்படப் பிரிவு, காவல்துறை, நீதித்துறை, ஆகிய வற்றினதும் மகளிர் பொறுப்பாளர்களுக்கான மகளிர் பேர வைக் கூட்டம் மாதம் ஒருமுறை நடைபெறும்.
2008 : மே மாதம் சோதியா படையணிப் போராளிகளின் கூட்டு தலைமைத்துவமும் களமுனை கட்டளையும்
ஓமந்தை : தலைமை – லெப்.கேணல் வரதா
மன்னார் : தலைமை – லெப்.கேணல் செல்வி
மணலாறு : தலைமை – லெப்.கேணல் தர்மா
முகமாலை : தலைமை – லெப்.கேணல் மணிமொழி
2009 : ஆனந்தபுரம் ஊடறுப்பு சமரில் வீரமரணம்

● செந்தூரி

**2009 பெப்ரவரி :**

இராணுவம் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, கேப்பாபிலவு, தேவிபுரம் ஆகிய இடங்களில் நிலை கொண்டிருந்தது. அதாவது முக்கால வட்ட வடிவில் இராணுவம் அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்திருந்தது. மிஞ்சிய பகுதிகள், புதுக்குடியிருப்பின் ஆனந்தபுரம், இரணைப் பாலை என்ற சிறு பகுதியும் மாத்தளன் முள்ளிவாய்க்காலுக்கிடைப்பட்ட ஒடுங்கிய கடற்கரைப் பிரதேசமும்தான்.

ஆனந்தபுரம் சமரில் ஏறக்குறைய மூவாயிரம் வரையான போராளிகள் ஈடுபடுத்தப்பட்டனர். முக்கியமான படைத்தளபதிகள் எல்லோரும் கூடிக் களத்திலிறங்கினர். கேணல் பானு, கேணல் விதுஷா, கேணல் தீபன், கேணல் கடாபி, கேணல் மணிவண்ணன், கேணல் நாகேஸ், கேணல் சேரலாதன் இப்படிப் பலர். (இவர்களில் பலர் பின்னர் பிரிகேடியர் என்ற இராணுவ நிலைக்கு உயர்த்தப்பட்டனர்) இவர்களைத் தவிர, அடுத்த நிலையிலுள்ள முக்கிய தளபதிகள் பலரும் களத்தில் நேரடியாக இறங்கியிருந்தனர்.

குடாரப்புத் தரை இறக்கம், அதைத் தொடர்ந்து பெட்டி வடிவில் இத்தாவிலில் வியூகம் அமைத்து கேணல் பால்ராஜ், கேணல் விதுஷா ஆகியோர் தமது அணிகளை வைத்துச் சமரிட்டதைப் போல ஆனந்தபுரம் சமரை இந்தத் தளபதிகள் வடிவமைத்திருந்தனர். எனவே இந்தத் திட்டத்தின்படி இந்தச் சமரை ஒரு மாதத்துக்கும் மேலாக அந்தப் பகுதியில் நீடிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்த ஒரு மாதத்திலும் படையினரை அந்தப் பகுதிக்கு - தமது வியூகத்தினுள் - கவர்ந்திழுத்து அவர்களுக்குப் பேரழிவுகளை ஏற்படுத்துவதே திட்டம். ஆகவே அதற்கேற்ற வகையில் வியூகங்கள், தாக்குதல் முறைமைகள், தாக்குதல் அணிகள், அதற்கான ஆயுதப் பிரயோகம் மற்றும் வழங்கல் என சகலதும் ஒழுங்கு படுத்தப்பட்டன. திட்டத்தின்படி போர் தொடங்கியது. கடுமையான போர். பேரழிவுகளோடு அது தொடர்ந்து கொண்டிருந்தது.

இரவு பகல் என்றில்லாத தாக்குதல். நிலை கொண்ட படையினர் மீதும் தாக்குதல். முன்னேறி வரும் படையினர் மீதும் தாக்குதல். இப்படி படையைச் சிதைக்கும் உச்சகட்டப் போர் இரண்டு நாட்களைக் கடந்தது. செய்திகளைச் சொன்னபோதும் எதையும் சரியாக உறுதிப்படுத்தவோ உத்தரவாதப் படுத்தவோ முடியவில்லை. சனங்கள் கொஞ்சம் நம்பிக்கை நிலைக்கு வந்தனர். போராளிகளிற் பலரிடமும் உற்சாகம் ஏற்பட்டது. ஆனால் எல்லோரிடமும் ஓர் அவநம்பிக்கையும் இழையோடிக் கொண்டேயிருந்தது.

இதேவேளை படையினரிடம் செல்வோரின் தொகை திடீரெனக் குறைந்து விட்டது. போர் நடந்து கொண்டிருக்கும்போது படையினரிடம் சென்றால் உயிராபத்துகள் நிகழக்கூடிய அபாயம் உண்டென்ற அபிப்பிராயம் சனங்களிடம் இருந்தது.

(18ஆம் பக்கம் பார்க்க)

# ஆனந்தபுரத்து ஆகுதி



**கிட்டு பீரங்கி படையணியின் சிறப்புத் தளபதி**
**பிரிகேடியர் மணிவண்ணன்**
**[அருளம்பலம் தவேந்திரன்]**

| | |
|---|---|
| பிறப்பிடம் | : பருத்தித்துறை – வடமராட்சி |
| பூர்வீகம் | : வடமராட்சி |
| கல்வி | : இடைநிலை |
| இயக்கத்தில் இணைவு | : 1987 |
| 1991 | : ஆகாய கடல்வெளி சமருக்கான பிற்கால சூட்டாதரவு |
| 1993 | : பூநகரி தவளைப்பாய்ச்சல் வழங்கல் அணி |
| 1995 | : சூரியக்கதிர் நடவடிக்கையின் போது வன்னிக்கான வள நகர்த்தல் பணி |
| 1996 | : முல்லைத்தீவில் கைப்பற்றப்பட்ட இராணுவத்தின் ஆட்லறிகளோடு கிட்டு பீரங்கிப் படையணி உருவாக்கம் |
| 1999 | : ஓயாத அலைகள் இரண்டு / மூன்று நடவடிக்கைகளில் பீரங்கி சூட்டுப் பொறுப்பு |
| 2000 | : பத்து ஆட்லறிகள் கொண்ட முழுமையான மரபுவழி இராணுவ பீரங்கி படையணி உருவாக்கம். பலாலித் தளம் மீதான ஆட்லறித் தாக்குதல்கள், முகமாலை – பளை மீதான தாக்குதல்கள், வவுனியா ஜோசப் தளம் மீதான ஆட்லறித் தாக்குதல்கள், மன்னார் சிறிலங்கா படைத்தளம் மீதான ஆட்லறித் தாக்குதல்கள், முகமாலை சமர்க்களத்திலே ஆட்லறிகளின் நேரடி சூச்சின் மூலம் பல ராங்கிகளை அழித்தமை. |
| 2006-2009 | : சகல சமர்க்களங்களிலும் கிட்டு பீரங்கிப் படையணியின் பின் கள அல்லது முன்னணி சூட்டாதரவு |
| 2009 | : ஆனந்தபுரம் சமர்க்களத்தில் வீரமரணம் |

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதனால் அவர்கள் நிலைமைகளின் போக்கை உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இரண்டு நாட்கள் தீவிரமாக நடந்த போர் மூன்றாவது நாள் மெல்ல தணிவுக்கு வந்தது. ஆனாலும் அதன் கொந்தளிப்புக் குறையவில்லை. அப்போது ஒரு செய்தி மெல்லக் கசிந்தது. ஆனால் அந்தக் கசிவுத் தகவல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்டத்துக்கான பேரழிவு தந்த செய்தி அது

ஆனந்தபுரம் சமர்தான் புலிகளின் இறுதிச் சமர். அதற்குப் பின்னர் நடந்தவை எதுவும் பதிவுக்குரிய பெறுமானத்தைக் கொண்டவையாக இல்லை. அதாவது புலிகளால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இறுதி நடவடிக்கை அதுதான்.

அந்தச்சமரில் கொல்லப்பட்டதைப்போல வேறு எந்தச் சமரிலும் புலிகளின் பெரும் எண்ணிக்கையான மூத்த தளபதிகள் கொல்லப்படவேயில்லை. அது எல்லோரையும் உலுக்கியதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

ஏப்ரல் 2009 மாத்தளன் முள்ளிவாய்க்கால் கடற்கரையில் பெருந்துக்கத்துடனும் பேரவலங்களோடும் கழிந்து கொண்டிருந்தது.

நீண்டு நெடிந்த தமிழர் தாயகத்துக்கான கனவுகளோடு போராட்ட வாழ்வில் இணைந்த மூத்த தளபதிகள் உள்ளிட்ட சுமார் 650 வரையான தமிழீழ விடுதலைப் புலிப்போராளிகள் ஆனந்தபுரம் மண்ணில், நிலையான வீர விதைகளாக வீழ்ந்தனர். ■



**படையகப் பயிற்சிக் கல்லூரிப் பொறுப்பாளர்**
**பிரிகேடியர் ஆதவன் / கடாபி**

| | |
|---|---|
| பிறப்பிடம் | : கொற்றாவத்தை, வடமராட்சி |
| பூர்வீகம் | : வடமராட்சி |
| கல்வி | : இடைநிலை |
| இயக்கத்தில் இணைவு | : 1984 – இந்தியாவில் 6ஆவது பயிற்சி பாசறை |
| 1986 | : மணலாற்றில் தேசியத்தலைவரின் மெய்ப்பாதுகாவலர் குறிபார்த்து சுடுவதில் தன்னிகரில்லாத தனித்திறமை |
| 1987 | : தமிழீழம் வந்த வைகோ அவர்களை கடல்வழியாக பயணிக்கும் பொறுப்பு |
| 1989–1991 | : கேணல் சங்கரினால் ஆரம்பிக்கப்பட்ட கடல்புறா அணியின் தளபதி |
| 1991 | : ஆனையிறவு ஆகாய கடல்வெளிச்சமரில் நெஞ்சில் விழுப்புண் |
| 1992 | : இம்ரான் பாண்டியன் படையணியின் உள்ளக பாதுகாப்பு பொறுப்பாளர் (தலைவரின் பாதுகாப்பு, போராளிகளின் தேவைகள், தாக்குதல், பயிற்சி, புலனாய்வு) |
| 1995 | : பலாலியிருந்து புறப்பட்ட இரு அவ்ரோ விமானங்களை வானில் தாக்கி வீழ்த்தியமை |
| 1997 | : முல்லைத்தீவு கடலில் உலங்குவானூர்தி சுட்டு வீழ்த்தியமை |
| 1999 | : அளம்பில் கடலில் டோறாக்களை பீரங்கியால் தாக்கியழித்தமை |
| 1995–2002 | : இம்ரான் பாண்டியன் படையணியின் சிறப்பு தளபதி (இம்ரான் பாண்டியன் படையணியின் ஒருங்கிணைப்பு அணிகள் – கரும்புலி அணி, லெப் கேணல் விக்டர் கவச எதிர்ப்புப்படையணி, லெப் கேணல் ராயன் கல்விப்பிரிவு, மயூரன் பதுங்கிச்சுடும் அணி, செம்பியன் வேவு அணி, கேணல் சங்கர் ஆள ஊடுருவித்தாக்கும் அணி, லெப் கேணல் ராதா வான்காப்புப் படையணி, விடுதலைப்புலிகளின் கவசப்படையணி படையத் தொடக்க கல்லூரிகள்) |
| 2003 | : படையகத் தொடக்கப் பயிற்சிப் கல்லூரிகளின் பொறுப் பாளர் |
| 2006 | : படையகப் பயிற்சிக் கூட்டுத் தளபதி |
| 2009 | : ஆனந்தபுரம் ஊடறுப்பு சமரில் வீரமரணம். |



**மாலதி படையணியின் தாக்குதல் ஒருங்கிணைப்பு**
**கட்டளைத் தளபதி பிரிகேடியர் விதுஷா [குருக்கள்**
**கந்தையா ஞானபூரணி]**

| | |
|---|---|
| பிறப்பிடம் | : கப்பூது – கரவெட்டி |
| பூர்வீகம் | : வடமராட்சி |
| கல்வி | : க.பொ.த உயர்தரம் வர்த்தகப் பிரிவு – நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் |
| இயக்கத்தில் இணைவு | : 1986 |
| 1986 | : சுதந்திர பறவைகள் பிரிவில் கிராமிய கருத்தூட்டல் பணிகள் |
| 1987 | : வடமராட்சியைக் கைப்பற்றும் ஒப்பரேசன் லிபரேசன் எதிர் சமர |
| 1988 | : இந்திய இராணுவ கட்டுப்பாட்டிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மகளிர் அணியுடன் வருகை |
| 1990 | : தச்சன்காடு மினி முகாம் தகர்த்தழிப்பு |
| 1990 | : கொக்காவில் இராணுவமுகாம் தகர்ப்பில் காலில் விழுப்புண் |
| 1991 | : ஆனையிறவுச் சமரில் மாதர் அணியின் ஒரு பகுதித் தளபதி |
| 1992 | : பலாலி காவலரண் தாக்குதல்கள் – மகளிர் அணியின் துணைத்தளபதி நியமனம் |
| 1993 | : தவளைப்பாய்ச்சல் பின்களப்பணி – மாலதிபடையணியின் கட்டளைத்தளபதி |
| 1995 | : சூரியக்கதிர் நடவடிக்கைக்கு எதிர்ச்சமர் |
| 1998 | : ஓயாத அலை 2 கிளிநொச்சி கைப்பற்றப்பட்டு புலிக்கொடியேற்றினார். |
| 1999 | : ஓயாத அலை 3, தீச்சுவாலை முறியடிப்புச் சமர். |
| 2009 | : ஆனந்தபுரம் ஊடறுப்பு சமரில் வீரமரணம் |



திவ்ய மஹால்
Thiveya Mahal
* Wedding
* Puberty Ceremony
* Reception
* Birthday Party
* Conference
* Catering Services
No.1001 Vannarpannai,
K.K.S. Road, Jaffna.
021 222 1022
இல.1001 வண்ணார்பண்ணை,
கே.கே.எஸ். வீதி,யாழ்ப்பாணம்.
077 614 1374




ISHARA
NEW DRESS MART
இஷாரா
நியூ டிறெஸ் மார்ட் (பிறைவேட் லிமிடெட்)
Number one Name in the Fashion World...!
021 222 9925, 077 2628933
இல.199/A, 199/B
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
Web. : www.isharanewdressmart.com
E-mail : senura@isharanewdressmart.com




இப்பத்திரிகை மானிப்பாய் வீதி, உடுவில் என்ற முகவரியிலுள்ள அம்பலம் பதிப்பகத்தால், 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 10.04.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.